பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஜனவரி 2019



## தமிழுக்குப் பெருமை சேர்க்கும் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972

ஜனவரி 2019




(கவியுலகப் பூஞ்சோலையின்
3 ம் ஆண்டு) 2018
ஜனவரி 26, 27
இரண்டுநாள்விழாவில்
வெளியிடப்படவிருக்கிறது.

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
அமின் மொஹமெட்
*இணையாசிரியர் :*
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
*நிர்வாக ஆசிரியர் :*
சஃபி மொஹமெட்
*ஆசிரியர் குழு :*
ஹிப்ஸீர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்
*ஆலோசகர்கள் :*
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிஞர் சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.
4, Sengeniyamman kovil street, Solainagar,
Muthialpet, Pondichery - 605 003. India.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# தேவதை நீயே...

எத்தனை நாட்கள் தான்
அலைகழிக்கப் போகிறாய்
ஒவ்வொரு பொழுதும்
எவ்வளவு காதலை இழக்கிறாய்
தெரியுமா உனக்கு
என்னைச் சந்திக்கும் போது
நிச்சயம் கண்ணீர்
வடிக்கத்தான் போகிறாய்

உன்னை நான் சந்திப்பேனோ
தெரியவில்லை
பார்த்த அந்த வினாடியில்
துவங்கும் மற்றுமொரு முறை
உன்னுடனான எனது காதல்
இவ்வளவு காதலை நிச்சயம்
நீ மறுப்பதற்கு வாய்ப்பே இல்லை
அந்த பொழுதிற்காக
காத்திருக்கின்றேன்

உன் பெயரை
அறிந்தவன் நான்
இருந்தும் என்னுடன் வசிக்கும்
பறவைகளிடமும்
செல்லமாய் வளர்க்கும்
பொமரேனியன் நாய்க்குட்டியிடமும்
என் தேவதை நீயென சொல்லி
வைத்திருக்கின்றேன்

நீ என்னைக் காணவரும்
அந்த நாளில்
எல்லாப் பறவைகளும்
சங்கீதமாய் பாடப்போகின்றன
தேவதை வந்துவிட்டாள் என்று
அதுவரை காத்திருக்கின்றேன்
உனது வெட்கம் ரசிக்க

உன் இடையில் கைகோர்த்தபடி
மழைத்தூரலில்
நனையப் போகின்றேன்
உன் விரலிடுக்கில் விரல்கோர்த்து
வாழ்வின் கடைசி வரை
பயணிக்கப்போகின்றேன்

உன்னை என் மார்பினில் கிடத்தி
குளிர் இரவுகளைக் கழிக்கவேண்டும்
உன் மடியில் தலை சாய்த்து
என் மரணம் தெரியாமல்
உறங்க வேண்டும்

உன் கண்கள் பார்த்து
எனது கவிதைகளை
எழுதப்போகின்றேன்
உனக்குள்ளும் இருக்கும் காதலை
நான் ரசிக்கப் போகின்றேன்
நிச்சயம் காதலிப்பாய் தானே

அதிகம் காத்திருக்கின்றேன்
வீணாவது காலமல்ல
காதலும் தான்
பிறகு வந்து என்னை திட்டாதே

எனது தோட்டம் முழுவதும்
நிறைந்திருக்கும்
உனக்கான எனது பூக்கள்
உன்னைப் பாடக் காத்திருக்கும்
பறவைகள்
நம்மை நனைக்கப்போகும் முதல்மழை
இவற்றோடு நானும் காத்திருக்கின்றேன்
பூங்கொத்துடன்
இதயம் நிரம்பிய காதலோடு.

கோவை சசிகுமார்





**பொன்மணிதாசன்**

# வண்டி!

சில்லென்ற காற்று முகம் முழுவதும் பரவுகிறது.

ஏதோ ஒரு உணர்ச்சி பெருக்கு மெல்ல இமைகளைப் பிரிக்கிறேன்.

நான் படுத்துக்கிடக்கும் கட்டிலின் வெளிப் புறம் ஜன்னல் வழியே வானம்....

கருமை பூசிய வண்ணக் கோலத்தில் காற்றின் வேகத்தில் மேகப்பொதிகள் அங்கு மிங்குமாய் நகர்கின்றன.

இன்னும் ஒரு நிமிடம் கூட அதிகமாகி விடலாம் மழை இறங்கப்போவது நிச்சயம்.

ஒருவேளை மழை இங்கினால் எழுந்து கூட இல்லை நகர்ந்து கூட கைகளை நீட்டி ஜன்னல் கதவுகளை மூட முடியாதஉடம்பு தளர்ச்சி.

இப்பவோ எப்பவோ என உயிர் ஊசலிடிக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் நினைவுமட்டும் இன்னும் தப்பிப்போகவில்லை.மருத்துவர்கள் கெடு இன்று இரவுக்குள் சிவலோகப்பதவி நிச்சயம்.

என் ஒரே மகன் சீவா வெளியூர்களில் இருக்கும்உறவுக்காரர்களுக்கெல்லாம் தொலைபேசி மூலம் என் முடிவுரையைசொல்லிக்கொண்டிரூந்தான்.

உள்ளூர்க்காரர்களும் செய்திக் கேள்விப் பட்டு ஓரிருவர் ஒப்புக்காகவும் உண்மையான விசுவாசத்துக்காகவும் வந்து பார்த்து சென்றனர்.

நான் அவர்களைப் பார்க்கிறேன். ஆனால் பேச்சு எழவில்லை.

‘‘அப்பா...அப்பா...’’ குரல் கேட்டு மீண்டும் விழி திறக்கிறேன்.

பக்கத்தில் சீவா -

அவனுக்குப் பக்கத்தில் ஒரு வாலிபன். அது யாரென்று சட்டென அடையாளம் காண முடியவில்லை.

''அப்பா நம்ம ராமச்சந்திர ஆசாரித் தாத்தாவோட பெரிய பிள்ளை வந்திருக்காங்க''

ராமச்சந்திர ஆசாரி பெயரை கேட்ட மாத்திரத்தில் டக்கென்று எழுந்து உட்கார்ந்து விட வேண்டுமென்ற துடிப்பு. செயல் பட முடியவில்லை.''ம்'' என்கிறேன்.

எனக்குள் அந்த பருவகால நடப்புகள் நினைத்திரையில் மின் பிம்பங்களாய் வந்து போகிறது.

அப்போது எனக்கு பத்து வயதிருக்கும் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை அப்பா என்னை தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்.

தோட்டத்தில் அப்பாவுக்காக காத்திருந்த ஒரு பெரியவர் அப்பாவைக் கண்டதும் "வணக்கங்கய்யா" என்றார். பெரியவரைஉற்று நோக்கினேன்.

வெற்றிலைப்போட்டு சிவப்பேறிய உதடுகள் கறுத்த தேகம் மார்புக்கு குறுக்காய் பூணூல் கையில் பென்சில் ஒன்றை வைத்துக்கொண்டு ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி பின்பு யோசித்து பின்பு எழுதினார்.

அந்த புழுக்கை பென்சிலை காதின் மேலே சொருகிக் கொண்டு அப்பாவிடம் சொன்னார்.

''கணக்குப்படி அந்த ரெண்டு தேக்கை யும் வெட்டினா போதுமுங்க''

''ஏன்டா ராமச்சந்திரா! ரெண்டுமா வேணும்''

''ஆமாங்க'' இது ஆசாரி

யோசித்தார் அப்பா

பின்பு ''சரி சரி'' தலையசைத்தார்

சிறிது நேரத்தில் எங்கள் பண்ணை யாட்கள் வெட்டி சாய்த்தனர் தேக்கு மரங்களை.

வேலை ஆரம்பமாகிவிட்டது.

''என்னப்பா செய்யிறீங்க?''

''வண்டிடா''

''வண்டியா?''

ஆமாண்டா. எத்தன நாளக்கி நடக்குறது டவுனுக்கு! வண்டி வச்சிட்டா தெனம் நாம டவுனுக்கு வண்டிக்கட்டிக்கிட்டு போகலாமில்லே! அதான் மரமும் சும்மா நிக்குது காசு குடுத்தாவாங்கப்போறோம்? என்றார் அப்பா.

எனக்குள் ஆர்வம் பொங்கி வழியாத குறைதான்.

அன்றுமுதல் தாத்தா தாத்தா என்று ஆசாரித்தாத்தாவோடு ஒட்டிக்கொண்டேன்.

தினமும் பள்ளிக்கூடம் எப்போது விடும் என்று காத்திருப்பேன்.

பெல் அடித்த மறுகணம் தோட்டத்தி லிருப்பேன்.

ஆசாரித் தாத்தா அந்த மரங்களை அறுத்து இழைத்து பின்பு தடவி மறுபடி இழைத்து நேர் பார்த்து பென்சிலால் கோடு போட்டு சிறு சிறு பள்ளங்களுக்கு மெழுகு தடவி என்னென்னவோ செய்வார். எனக்கு அதெல்லாம் சுவாரஸ்யப் படாது

''வண்டி எப்ப தாத்தா ஓடும்?'' அவரை நச்சரிக்கத் தொடங்கினேன்.

''கூடிய சீக்கிரம் வேல முடிஞ்சிடும் தம்பி.''

ஒவ்வொருமுறையும் என் கேள்விக்கு அலுக்காமல் பதில் சொல்வார் தாத்தா.

வண்டி முழுமையடைய ஒரு நாள்

# கிழக்கெழும் பரிதி - பாரதி

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்

உயிரெலா மெழுத்தி லூற்றி
  ஒளிதனை பாட்டி லேற்றி
வயிரெலாங் காய்ந்த போதும்
  மழுப்படை மொழியி லேந்தி
செயிர்தனை எதிர்த்து நிற்க
  செருக்களம் புகுந்த வீரா!
உயிர்வரை உன்னை ஏத்தி
  உகுக்கிறேன் கண்ணீ ரிங்கே

சுதந்திரம் உயிரின் தாகம்
  சுடர்கிற அறிவால் கண்டு
இதந்தரு மெல்லாம் விட்டு
  ஈர்க்கிற திலக ரோடு
முதல்குரல் எமதே என்று
  முழங்கினாய் தூய வீரா!
இதற்கிணை இன்றுஞ் சொல்ல
  யாருளார் உன்னைப் போலே.

கடுந்திறல் மறவ ரன்னோர்
  கடுந்தவம் புரிந்தார் போன்று
நடுக்குறு சிறிது மின்றி
  நடுவிலா என்பும் நோக
அடுக்கிலா வடியைத் தாங்கி
  அளித்தநல் சுதந்தி ரத்தைத்
துடுக்குறு புன்மை யாளர்
  மிடுக்கிலை என்றார் ஐயோ!

அழுக்குறு நெஞ்சங் கொண்டு
  அறனிலா மொழியால் பேசி
வழுக்கிய மாந்த ரெல்லாம்
  வரிசையா ஆள வந்தார்
இழுக்குகள் இவரால் வந்து
  இழக்குது மாண்பை வெற்றி;
கிழக்கெழும் பரிதி யன்ன
  கிளர்ந்தெழ செய்வா யெம்மை

கிறுக்குகள் ஆளுந் தேயம்
  கிழமைபோல் நாளுந் தேயும்
செருக்குறும் சுதந்தி ரத்தைச்
  சிறுமைகள் தீயாய்ச் சூழும்
நறுக்குவோம் அடிமை வாலை
  நமக்கினி அதுவே வேலை
முறுக்கிய மீசை கொண்டு
  முழக்குவோம் அவனைப் போன்றே.

**ஆதி கவி (எ) சாமி.சுரேஷ்**



---

தோட்டத்தில் வழக்கம்போல் ஆசாரித் தாத்தாவின் செய்கைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்பா வந்தார்.வண்டியைத் தொட்டுப் பார்த்தார். சக்கரங்களைப் பிடித்து உலுக்கிப் பார்த்தார்.

"புது அச்சு கிரீஸ் கொஞ்சம் அதிகமா வைக்கனும் புரியுதா? வண்டி கலர் கொஞ்சம் கம்மியா இருக்கே! கப்பா கொடுத்திருக்கலாமோ!கூண்டகூட இன்னும் உறுதியா செய்திருக்கலாமில்லியா?"

''தேவையில்லீங்க. வண்டி ரொம்ப நல்லா வந்துருக்குங்க.. இது உங்க கால மட்டுமில்லீங்க.உங்கபிள்ளஇதோநிக்கிறாரே இவரு காலம் வரைக்கும்வரும்.நீங்க வேணும்னா பாருங்க!" என்று ஆசாரித்தாத்தா என் தோளைத் தொட்டார்.

அந்த வார்த்தைகள் அவர் கைவழியாக

என் உடலுக்குள் ஊர்வதுபோல இருந்தது.

வண்டி முழுமைப் பெற்று ஓடத் தொடங்கிய முதல்நாள்.அந்தநிகழ்வுஏதோ இப்போது நடந்ததுபோல்தெரிகிறது

அப்பா அம்மா நான் மூவரும் அந்த கூண்டு வண்டிக்குள் ஏறிக்கொள்ள நான் மட்டும் முன்னால் நகர்ந்து வண்டி ஓட்டும் எங்கள் பண்ணையாள் ஓரமாய்உட்கார்ந்து கொண்டேன்.

வண்டி ஓடும்போது வெளியே வேடிக்கைப் பார்க்கவேண்டுமே.

பூரணிமாடுகள் கழுத்தில் பெல்ட்டில் பதிக்கப்பட்ட சலங்கைகள் ஜல்ஜல் என்று ஒலி எழுப்ப. வண்டி ஓடியது.

ஊருக்கு கோடியில் இருந்த எங்கள் குல தெய்வம் மகா காளியம்மன் ஆலயத்தை வண்டியுடைய; அப்பா அர்ச்சகரைக் கூப்பிட்டு சொன்னார்.அர்ச்சகரும் அப்பா சொன்னதைக் கேட்டுவிட்டு அப்படியே ஆகட்டுங்க என்றார்.

பூஜை தொடங்கியது--

வண்டிக்கு பெரிய மாலை கொண்டு வந்து போட்டு இரண்டு சக்கரங்களுக்கும் அடியில் எலும்பிச்சம்பழங்கள் வைத்து கற்பூரம் காட்டி “இப்ப எடுங்க வண்டியை“ என்றார் அர்ச்சகர்

அவர் சொன்னபடியே பண்ணையாள் எலும்பிச்சம் பழங்கள் சக்கரங்களை விட்டு நகராமல் பார்த்துக் கொண்டுவண்டியில் ஏறி உட்கார்ந்து வண்டியில் நாங்க ளெல்லாம் ஏறிக்கொண்டோமா என்பதைப் பார்த்து உறுதி செய்து கொண்டு «ஹை» என்று மாடுகளை அதட்ட வண்டி வேகமெடுத்தது வீட்டை நோக்கி.

அப்பா வீட்டருகில் வண்டிக்காகவே ஒரு கொட்டகைப் போட்டிருந்தார்.அதில் அந்த வண்டி நிற்பதே ஒரு தனி அழகு

கால மாற்றங்களில் அடுத்த இருபது ஆண்டுகளில் கார் பைக் என உல்லாச வாகனங்கள் நாட்டில் படையெடுக்க அப்பாவும் ஒரு கார் வாங்கினார்.

அதற்குப் பிறகு அந்த கூண்டு வண்டியை யாரும் ஏறெடுத்துக்கூட பார்ப்பதில்லை.

# லப்... டப்...

**திருவிழி கண்டுவிட்டால்**
**அன்றைய பொழுது**
**திருவிழாதான்...**

**விழித்திருந்தேன்**
**எதிரே நிற்கிறாய்**
**கண் மூடினால் ஏதோ**

**சின்னச் சின்ன அசைவும்**
**நீ என்னைப் பார்ப்பதாகவே**
**அர்த்தப்படுகிறது...**

**கதவு மூடுவதும்**
**ஆடைத் திறப்பதுமாகவே**
**நம் ஆயுள்வரை நீளட்டும்...**

**நீ நான்**
**நம்மோடு இரவும்**
**மிக மிக நெருக்கமாய்...**

**எஸ். உதயபாலா**

அது அப்படியே கொட்டகையிலேயே நிலைத்து நின்று விட்டது. அது பராமரிக்கப்படாமலேயே கிடந்தபடியால் தூசு படிந்து மக்கவும் தொடங்கிவிட்டது.

என்னதான் காரில் வெளியே சென்று வந்தாலும் கூட அந்த வண்டியைப் பார்க்கும்போதெல்லாம் அந்த வண்டி உருவான காலங்கள் தலை தூக்கத்தான் செய்யும் மனதில்

அந்த வண்டியில் பள்ளிக்குப் போனது டவுனுக்குப்போனது வெளியூர் சொந்தபந்த வீட்டு விசேஷங்களுக்கு சென்று வந்தது நினைவுக்கு வரும். அப்போது ஒரு ஏக்கப்பெரு மூச்சு ஒன்று என்னிடமிருந்து வெளிப்படும் அத்தோடு சரி

அப்பா அம்மா காலம் கடந்து எனது காலத்தில் என் மகன் சீவாவுக்கும் அந்த வண்டி உருவான கதையை சொல்லியுமிருக்கிறேன்.

இது ஏம்ப்பா எடத்த அடச்சிக்கிட்டு பேசாம விறகுக்கு வித்துடலாமேன்னு அடிக்கடி சொல்வான் என் மகன்.

அத வித்துதானா நாம கஞ்சிக்குடிக்கப் போறோம்? வண்டி பாட்டுக்கு நிற்கட்டு மென்பேன்.

மறுப்பேதும் சொல்லாமல அத்தோடு அந்தப் பேச்சை விட்டு விடுவான்.

அந்த அழகிய வண்டியை செய்து கொடுத்த ஆசாரி மகன் வந்திருக்கிறாரா?

முயற்சி செய்து விழிகளை நகர்த்தி தெளிவாய் அந்த ஆசாரி மகனை பார்க்க முயல்கிறேன்.

நீர் திரையிடுகிறது. முடியவில்லை மெல்ல கஷ்டப்பட்டு கையசைக்கிறேன். அவரும் என்னைத் தொட்டு ஏதோ சொல்லி விட்டு செல்கிறார்.

திடுமென்று இடி ஓசை

மழை இறங்கிவிட்டது. சாரல். யாரோ ஜன்னலை இழுத்து மூடுகிறார்கள்.

எனக்கு உடலுக்குள் ஒரு வித மாற்றம் உணர்ந்தும் உணராமலுமாய். கைகால் வெடுக் வெடுக்கென வெட்டுகிறது

மழையோ வானமே பொத்துக் கொண்டது போல் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது.

இரவு நெருங்கியும் மழை விட்ட பாடில்லை.

யாரோ சொல்கிறார்-----

சே! என்னப்பா மழ இது! அப்பாவுக்கு இப்படி இருக்கும்போது? பொசுக்குன்னு நின்னுட்டா அள்ளி வெச்சு கொளுத்த விறகு கூட கிடைக்காதே!

‘‘அதுக்கு ஒண்ணும் கவலையில்ல மாமா வண்டிக் கொட்டகையில நிற்குற வண்டிய ஒடச்சிக்கிடலாம். அது போதும் அப்பா ஒடம்புக்கு.’’

மகன் சீவாவின் அந்த வார்த்தைகள் மின்னலைப்போல பாய்கிறது செவிக்குள்.

ராமச்சந்திர ஆசாரித் தாத்தா அன்று சொன்னது இப்போது சொல்வதுபோல என் காதுக்குள் திரும்ப திரும்ப எதிரொலிக்கிறது.

‘‘வண்டி ரொம்ப நல்லா வந்துருக்குங்க. இது உங்க காலமட்டுமில்லீங்க உங்க மகன் இதோ நிக்கிறாரே இவரு காலம் வரைக்கும் வருங்க நீங்க வேணுமுன்னா பாருங்க’’

நறுக்கென்று ஒரு வலி நெஞ்சில். கண்கள் சொருக தலை சாய்கிறது. ■

# பசி

●
பரதேசிக்கும்
பணக்காரனுக்கும்
பாமரனுக்கும்
கேட்க்காமல் வரும்
அழையா விருந்தாளி

●
பணம்
பத்தும் செய்யும்
பசி வந்தால்
நித்தம் கொல்லும்

●
ஒரு சான் வயிறு
உணவில்லையெனில்
போய் சேரும் உயிரு

●
பந்திக்கு முந்து
படைக்கு பிந்து
பழமொழிக்கேற்ப
பசி வந்தால்
மனிதன் மறந்திடுவான்
பணத்தையும் பல சில
குணத்தையும்

●
உள் உணர்வுகள்
வென்றுவிடும்
பசி வந்தால்
பெருங்குடல்
சிருங்குடலை
தின்றுவிடும்

●
பிற உயிர்களை
காத்திடுவோம்
முடிந்த வரை
பிறர் பசிக்கு உணவு
அளித்திடுவோம்

சலாவுதீன், புதுச்சேரி

# நானிலு

## தன்முனைக் கவிதைகள்

1.
வேற்று மொழியாய்
இருந்தாலும்
வேரூன்றுதே
உண்மைக் காதல்.

2.
மூத்த மகளுக்கு வரன்
உயர்ந்த சாதியில்
இளைய மகளுக்கு
தேடிகிறார் மனிதசாதியில்.

3.
தொட்டுப் போன
தென்றல்
விட்டுச் சென்றது
உன் வாசம்.

4.
வாகனம் மோதியும்
வலியில்லை
அடிவாங்கியது
நிழல்.

5.
நான்கு நாட்கள்
இருப்பாய் என இருந்தேன்
இரண்டே நாட்களில்
சென்றுவிட்ட மழை.

6.
புதிய புத்தகம்
ஆர்வத்துடன் சிறுவன்
பக்கத்திற்கு பக்கம்
புதுவாசம் நுகர.

காரை.இரா. மேகலா
காரைக்கால்.



# வலி

உன் கருனைமொழியில்
காணலாம்
போனவன் நான்

ஏசுநாதனை
சிலுவையில் அரைகையில்
சுத்திலும் ஆணியும்
பிடித்த கைகளும்
வலிக்குமென
உணர்பவன் நான்

பழகாத
பரிசம்
கூச்சத்தில்
விடுப்பு கேட்கும்

இங்கே
பழகிய
பரிசமே
கூச்சமாய்
இருக்கிறது

காதலும்
ஒத்திகைஎன
நாடக உலகில்
நடிக்கத்தெரியாதவன்
தோற்றுபோகிறான்

இன்றைய
எனக்கானவலி
நாளை வரும் உனக்கு
அன்றுநீ
அறிவாய்
வலியின்
வலியை

ஆயுதா கவி அன்புமதி



# கனவுக்கன்னி

த.சாந்தி
சேத்தியாதோப்பு

காலை மணி 8.00. புரண்டு படுத்தார் பெரியவர் பெரியசாமி. வயது 80. சில வருடங்களுக்கு முன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மகனின் அன்பாலும், பணபலத்தாலும், கவனிப்பாலும் ஓரளவு தன் தேவைகளை தானே செய்துக் கொள்ளுமளவிற்க்கு தேறியுள்ளார். கணவனுக்கு பயந்தோ இல்லை உண்மையாகவோ அன்புடன் கவனிக்கும் மருமகள், பாசத்துடன் நக்கலடிக்கும் பேரன் என நிம்மதியாக சென்றுக் கொண்டிருக்கிறது அவரின் வாழ்வு.

ஹாலில் டி.வியின் சத்தம் அதிகமாக இருந்தது. காலையிலேயே டி.வியா, அதுவும் இவ்வளவு சத்தமாக என எரிச்சலாக நினைக்கும்போதே ",தாத்தா ஒங்க காமினி மர்கயா... ஓ.. ஓ" என விளையாட்டாய் ஊளையிட்டு காட்டினான் பேரன் செந்தில். அதிர்ந்துப் போனார் பெரியவர்.

"என்ன சொல்றே, நெஜமாவா, உண்மைய சொல்லு படபடப்பானார் பெரியவர். சத்தம் கேட்டு வெளியே வந்தான் மகன் செல்வம்.

"அப்பா... அப்பா.. என்னப்பா என்ன செய்யுது.. டேய் என்னடா சொன்ன தாத்தாக்கிட்ட. ஏன் இப்படி வேர்க்குது" என்று மகனிடம் கூச்சலிட்டான். பயந்து போன செந்தில் "அப்பா... நா.. நா ஒண்ணும் சொல்லல. தாத்தாவுக்கு காமினின்னா ஒரு இதுன்னு தெரியுமில்ல அதான்" முடிப்பதற்க்குள் சீறினான் செல்வம்.

"டேய் நிறுத்துடா. இது இப்போ ரொம்ப முக்கியம். போடா வேலய பாத்துக்கிட்டு". இப்பத்தான் கொஞ்சங் கொஞ்சமா சரியாயிட்டு வரார். இந்தமாதிரி தேவையில்லாத விஷயத்தயெல்லாம் அவர்க்கிட்ட சொல்லி அவருக்கு ஏதாவது ஆச்சு கொண்ணுடுவன் பாத்துக்க... ராஸ்கல்" என்றவன் அப்பவிடம் திரும்பி "சரிப்பா, நீங்க ரிலாக்ஸ் ஆகுங்க"என்றான்.

"எனக்கும் படுத்தே இருக்கறது என்னமோ போல இருக்கு. கொஞ்ச நேரம் டி.வி பாக்கிறேன்".

"சரிப்பா" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் செல்வம்.

"செந்தில், ஃபேனை போட்டுட்டு எங்கூட வந்து ஒக்காரு" என்று பேரனை அழைத்தார். "தாத்தாவும் பேரனும் டி.வி பாருங்க,நான் போய் சமைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அடுக்களைக்குள் புகுந்தாள் மருமகள்.

டி.வி யில் காமினியின் உயிரற்ற உடலையும், 55 வயதான அவளது மகனையும் காட்டினார்கள். இளைய தலைமுறை நடிகர் நடிகைகள்புகழாரம்சூட்டிக்கொண்டிருந்தனர்.

பெரியவருக்கு ஏனோ செல்லக்கிளியின் நினைவு வந்தது. புள்ளதாச்சி பொண்ண தவிக்கவிட்டுட்டு ஓடி வந்தது மனதை அறுத்தது. கண்ணீர் பெருகியது.

அதை யாருக்கும் தெரியாமல் மறைக்க நினைத்து, ''செந்தில், என்னெ ரூமில விட்டுடு, எனக்கு தூக்கம் வருது என்றார். "சரி தாத்தா, வாங்க போகலாம் என்று அவரை அழைத்து சென்று படுக்க வைத்து போர்வையை போர்த்திவிட்டு கதவை சாத்திவிட்டு சென்றான்.

மனம் 55 வருடங்களுக்கு முன்னே சென்றது. நெய்வேலிக்கு அருகிலுள்ள மேலக் குப்பம்தான் அவரின் சொந்த ஊர். வீட்டிற்கு ஒரே பிள்ளை. வசதியான குடும்பம். பணக்கார வீட்டு பிள்ளைகளுக்கே உரிய அனைத்து கல்யாண குணங்களும் அவருக்கும் இருந்தது. அவரது தந்தைக்கு மிகுந்த வருத்தம். அவருக்கு கோபம் வரும் போதெல்லாம், பொறுப்பில்லாத பிள்ளை யை பெற்றதற்காக மனைவியை திட்டி தீர்ப்பார். கூடியமட்டும் அப்பாவும் மகனும் சந்திப்பதை இருவருமே தவிர்த்தனர்.

அந்த காலக் கட்டத்தில்தான் ஏகாலி கோவிந்தனின் மூத்தமகள் செல்லக் கிளியை காதலித்தார். அவள் மாநிறமாக, வாளிப்பாக, கண்ணைக் கவரும் விதமாக இருப்பாள்.

அரசல் புரசலாக இந்த விஷயத்தை கேள்விப்பட்ட அப்பா வேலியைத் தாண்டி மேய வந்த ஆட்டை பார்த்தவர், "யேய்,

## ஒரு புள்ள வரம் தந்திடம்மா

**சுத்தாத கோயில் இல்ல**
**கும்பிடாத தெய்வம் இல்ல**
**தேவாலயமும் மசூதியும்**
**தேடிப் போயும் பலனில்லை**
**பாக்காத மருத்துவம் இல்ல**
**சோசுயமும் மந்திரமும்**
**சொன்னபடியும் செஞ்சாலும்**
**சொகமில்லை பலனில்லை**
**சாடைமாடை பேசும் சனம்**
**விசேடங்களில் ஒதுக்குறாக**
**புள்ள பூச்சி இல்லா வயிறுன்னு**
**பொழுது முச்சூடும் பேசுறாங்க.**
**குறிசொல்ல வந்தவளும்**
**கோண மாணலா சொல்றாக.**
**எத்தத் தின்னா பித்தம் தெளியும்**
**ஏன் வயித்தில பூச்சி வரும்**
**உலகத்து தெய்வங்களே**
**ஓங்கி உதைச்சு ஓடி ஆட**
**ஒருபுள்ள வரம் கேட்டேன்**
**மனசிறங்கி மகவு தாரும்**
**மடிப்பிச்சைக் கேட்கிறேனே**
**மண்ணுக்குள்ளே போகுமுன்னே**
**மழலைச் சத்தம் கேட்கோணும்**
**மலடிப் பட்டம் ஒழியோணும்**
**கண்திறப்பீர் தெய்வங்களே**
**கண்ணீரால் அபிசேகம் செய்றேன்.**

**கவிச்சுடர்**
**பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து**



## துளிப்பா

**உன்னில் வீழ்கிறேன்**

**பறக்கும் பறவையிடமிருந்து**
**உதிரும் சிறகாய்....**

**புயல் காற்றினால்**
**உதிரும் பச்சிலையாய்...**

**இதமாக சில நேரம்...**
**இன்னலாக சிலநேரம்......!!!**

**ரத்னா D.TED**
**திருநெல்வேலி!!**

மானங்கெட்ட ஆடே, ஒனக்கு மேயறதுக்கு எந்தோட்டந்தான் கெடச்சுதா, ஒனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம், பச்சையா இருந்தா பூந்துடுவியா. வெக்கமா இல்லியா ஒனக்கு. ஒழுங்கா இருந்தா இரு, இல்ல கால ஒடச்சிடுவேன். தூத்தேறி" என்று காறி உமிழ்ந்துவிட்டு, கையிலிருந்த சொம்பை ஆட்டை நோக்கி வீசி எறிந்து விட்டு சென்றார்.

அன்று இரவே கையில் இருந்த சிறு தொகை, அம்மாவின் ஐந்து பவுன் சங்கிலி மற்றும், செல்லக்கிளியுடன் சென்னைக்கு கிளம்பிவிட்டார். அங்கு பேந்த பேந்த முழிச்சுக்கிட்டு நின்று கொண்டிருந்தனர் இருவரும். பகல் முழுக்க கால் வலிக்க வலிக்க சுற்றினர். எப்பொழுது பணமும், நகையும் காணாமல் போனது என்று தெரியவில்லை. செய்வதறியாது திகைத்தனர் இருவரும்.

அவர்களை நெடுநேரமாக கவனித்துக் கொண்டிருந்த சைக்கிள்ரிக்ஷா ஓட்டும் செல்வம் என்ன ஏதென்று விசாரிக்க, கதறிவிட்டனர் இருவரும். வீட்டிற்கு அழைத்து சென்று மனைவியிடம் அறிமுகம் செய்துவைத்தார். இதே போன்று அவரும் சென்னைக்கு ஓடி வந்து தவித்தது நினைவிற்கு வர அவரே அவர்களுக்கு திருமணமும் செய்து வைத்தார். குடியிருக்க 15 ரூபாயில் வீடும் வாடகைக்கு பிடித்து தந்தார்.

பிழைப்புக்கு என்ன வழி என்று யோசித்த போது செல்லக்கிளி சொன்னாள். ''மச்சான், எனக்காக நீங்க, வசதியான வாழ்க்கையை விட்டுட்டு வந்திருக்கிறீங்க. ஒங்கள கண்ணுக் குள்ள வச்சு நாங்காப்பாத்தறேன்.'' மறுநாளே செல்வத்தின் மனைவியுடன் சென்று ஒரு வீட்டில் வேலைக்கும் சேர்ந்துவிட்டாள். பிறந்ததிலிருந்தே வசதியாக வாழ்ந்த வரால் வேலைக்கு செல்ல உடம்பு வளையவில்லை.

இந்த நிலையில் செல்லக்கிளி கர்ப்பம் அடைந்தாள். அதனால் உண்டாகும் சோர்வு வாந்தி, களைப்பு போன்றவற்றை எதையும் காட்டாமல் வேலைக்கு சென்றாள். வேலைக்கு சென்ற செல்லக்கிளி ஒரு நாள் அழுதுகொண்டே திரும்பி வந்தாள். விசாரித்த பெரியசாமியிடம், "புள்ளதாச்சி பொண்ண வேலைக்கு வச்சுக்க சங்கடமா இருக்குன்னு கணக்கு முடிச்சு அனுப்பிட்டாங்க. எவ்வளவோ சொல்லி பாத்தன். அந்த ஐய்யா ஒத்துக்கவேயில்ல. சரின்னு வந்திட்டன்.நீங்க ஒண்ணும் கவலைபடாதீங்க. நாளைக்கே வேற வேலை தேடிக்கலாம். சரி வாங்க சாப்பிட்டுட்டு தூங்கலாம்." சொன்னபடியே தூங்கியும் விட்டாள். பெரியசாமிக்கு தூக்கம் வரவில்லை. எப்படி இந்த ஊரில் இவளை வைத்துக்கொண்டு வாழ்வது. இவளுக்கு பிரசவம், பிள்ளை என்றால் எப்படி சமாளிப்பது. ஊருக்கும் போக முடியாது. யோசிக்க யோசிக்க மண்டையே வெடிப்பது போலிருந்தது. முடிவுக்கு வந்தவராய் செல்லக்கிளி வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு சத்தம் போடாமல் கிளம்பி காப்பாங்குளத்தில் இருக்கும் அத்தை வீட்டிற்கு சென்றான்.

அத்தை பார்த்ததும் கட்டிப்பிடித்து அழுதது. செல்லக்கிளி எங்கே என்று கேட்டது. மனசாட்சியேயில்லாமல்'', செத்துட்டா''

என்றார். சாப்பிட்டுவிட்டு திண்ணையில் படுத்து தூங்கினார்.

மறுநாள் காலையில் அப்பாவின் பலமான உதையால் பதறி துடித்து எழுந்தார். காதில் கேட்கமுடியாத வார்த்தைகளில் அர்ச்சித்தார். அத்தையும் மாமாவும் தடுக்க தடுக்க பாய்ந்து பாய்ந்து வந்து அடித்தார்.

அடித்து சோர்ந்து போனவர் அழத் தொடங்கினார். பெரியசாமியும் சேர்ந்து அழுதார். முகத்தை துண்டால் துடைத்து கொண்டு எழுந்தவர் அத்தையிடம் "ஆயி இந்த குடிகேடி இங்கயே இருக்கட்டும். நா போயி ஒரு ஏற்பாடு செஞ்சுட்டு வர்ரேன்.'' என்று சொல்லிவிட்டு சென்றார்.

நெய்வேலி டவுன்ஷிப்பில் அப்பாவிற்கு தெரிந்த இஞ்சினியர் ஒருவர் இருக்கிறார். அவர் மூலமாக மளிகை கடை ஏற்பாடு செய்துவிட்டு திரும்பி வந்தார்.

அத்தை, இஞ்சினியர் மற்றும் அவர் மனைவி ஆகியோர் விளக்கேற்றி கடையை தொடங்கி வைத்தனர். பெரியசாமியின் மனம் எதிலும் செல்லவில்லை. தொழிலை செவ்வனே செய்தார். மனம் மாறிய அப்பா அவருக்கு திருமணம் செய்ய முயற்சித்தார். அது தெரிந்த பெரியசாமி யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு சென்று செல்வத்தை சந்தித்து செல்லக்கிளியைப் பற்றி விசாரிக்க, ரௌத்திரமானார் செல்வம்." இங்க பாரு, என்ன கோவக்காரனாக்காத. நீ போயி மகராசனா இரு.இப்ப ஆள வுடு" என்று முகத்தை முறித்தார்.ரொம்ப கெஞ்சிய பிறகே செல்லக்கிளிக்கு ஆண்குழந்தை பிறந்ததாகவும், ஆவடியில் ஒரு வீட்டில் வேலை செய்துகொண்டு அவர்கள் வீட்டு அவுட் ஹவுசிலேயே தங்கி கொள்வதாக சொல்லிவிட்டு சென்றதாகவும் சொன்னார்.

# கதவின் வழியே நுழைவது எதுவெனில்...

**ஒரு கதவு திறக்கும் அளவை**
**நான்காகப்**
**பிரித்துக் கொள்வோம்**

**ஒரு பங்கு திறக்கும்பொழுது**
**பட்டாம்பூச்சி அன்றி**
**உங்கள் கண்களைக் காண மாட்டேன்**

**இரு மடங்கு திறக்கையில்**
**அணிலைத்தான் கூப்பிடுகிறேன்**
**உங்களின் ஒரு பாதி உடலை**
**கண்டிப்பாக வரவேற்க மாட்டேன்**

**அடுத்து மூன்று பங்கு திறந்து விட்டேன்**
**என் அருமை நாய்க்குட்டி**
**உள்ளே வரப் போகிறது**
**நீங்கள் முழுமையாக**
**எனக்குத் தெரிகிறீர்கள்**
**ஆனால்**
**நான் அழைத்தது உங்களை அல்ல**


**முடிவாக நான்கு பங்கு**
**தெளிவாகச் சொல்ல வேண்டுமெனில்**
**அந்தக் கதவை எவ்வளவு**
**திறக்க முடியுமோ**
**அப்படியாக**
**ஒரு முழுவாய் பிளந்து வைத்திருக்கிறேன்**

**இப்பொழுது**
**அண்டத்தின் மொத்தப் பேரன்பும்**
**உள்ளே வர எத்தனிக்கிறது**

**கனத்த அமைதி...**

**அங்கே**
**யாரும், எதுவும் இல்லை**
**அதற்குப் போட்டியாக....**

**– கு.அ.தமிழ்மொழி**



# நீயின்றி வாடுகிறேன்

கலங்காத கண்ணையும் கலங்க வைத்தாய்
பதறாத நெஞ்சையும் பரிதவிக்க வைத்தாய்

மனப்பூட்டால் பூட்டி வைத்தேன்
என் இதய அறைகளை
அதையும் உடைத்தெறிந்து
அனுமதியின்றி உள்ளே நுழைந்தாய்

இரு கண்கள் கொண்டு கவர்ந்தவர்களை
புறந்தள்ளியதுண்டு நான் - ஆனால்,
உன் கண்கள் ஓரத்தில் பார்க்கும் பொழுது
ஒன்றை கண்ணாக தெரிந்தாய்
சற்றே என்நிலை மறந்து தடுமாறி
உன் விழிக்குள் எனைக் கண்டேன்

ஒன்டரையான கண்ணை
நேசித்ததாலேயோ என்னவோ
என் காதல் முழுமைபெறாமல் போனதே

சொற்ப காலம் உரையாடி
உன்னருகில் வராமல்
வாழ்ந்து மகிழ்ந்திருந்தேன்
வசந்தமென நினைத்து

யார் எனக்கிட்ட சாபமோ
உன் பிரிவால் துன்பப் பட்டு
நீயின்றி வாடுகிறேன்

நூலறுந்த பட்டம் போல்
மரக்கிளையில் சிக்கி
அந்தரத்தில் தொங்குகின்றேன்
நீ மீட்டெடுப்பாய் என்ற நம்பிக்கையில்...

எஸ்.கிரிஷ்ணவேணி

அண்ணே, அட்ரஸ் தெரியுமாண்ணே என்று கேட்க செருப்பை எடுத்து அடிக்க வர திரும்பிப்பார்க்காமல் ஓடி வந்திட்டார்.

அப்பா பார்த்து வைத்த செல்லம்மாளை திருமணம் செய்துக்கொண்டார். மனசு ஒட்டாமலேயே வாழ்ந்தார் என்பதை விட நாட்களை கடத்தினார் என்பதே சரி. இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பிறந்த ஆண் குழந்தைக்கு செல்வம் என்றே பெயர் வைத்தார். தொழில் தழைத்து செல்வம் பெருகியது. செல்லம்மாளும் மகனை வளர்ப்பதிலேயே காலத்தை கழித்தாள். நாட்கள் செல்ல செல்ல செல்வமும், செல்வனும் சேர்ந்தே வளர்ந்தனர்.

செல்வம் பி.ஈ முடித்தான். தொழில் தொடங்க உதவிய இஞ்சினியரே செல்வனுக்கும் வேலை கிடைக்க ஏற்பாடு செய்தார். வேலையும் கிடைத்தது. தந்தை சந்தோஷத்தை தொலைத்த சென்னையில் மகன் வாழ்வை தேடிக்கொண்டான்.

காவ்யா என்ற தெலுங்கு பெண்ணை காதலிப்பதாக மகன் சொன்ன பொழுது எந்த மறுப்பும் சொல்லாமல் திருமணம் செய்து வைத்தார்.

அதற்காகவே காத்திருந்தது போல செல்லம்மாள் திருமணம் முடிந்த மறுமாதமே இறந்துவிட்டாள். அடுத்த ஆண்டே பேரன் பிறந்தான். பதினைந்து ஆண்டுகள் தனிமையில் வழ்ந்தார். கடந்த ஈராண்டுக்கு முன்பு பக்கவாதம் வர மகனுடன் வாசம்.

நெஞ்சு வலித்தது. மூச்சு திணறியது. செல்லக்கிளியின் முகம் கண்முன் தோன்றியது. செல்லக்கிளி..., செல்லக்கிளி வாய் முணுமுணுத்தது. தலை தொங்கிவிட்டது. ஆம் பெரியசாமி இறந்து விட்டார்.

அவரின் சாவு ஒரு ரசிகனின் துயரம் என்றுதான் அனைவராலும் பேசப்பட்டது. ஆனால் செல்லக்கிளிதான் காமினி என்பது பெரியசாமிக்கே தெரியாது என்பதுதான் விதியின் விளையாட்டு.

■

# மடலேறலும் உரிமை

தமிழைச் சிறப்பாக்கியவர்களுள் ஒருவனாய் திகழ்கிறவன் தொல்காப்பியன். அகத்தியன் என்னும் தமிழ் உபாத்தியாரிடம் தமிழ்கற்று, தமிழுக்கான இலக்கணம் சமைத்த தமிழ் பட்டதாரி. பிறமொழிகளுக்கு இல்லாத சிறப்புத்தமிழ்மொழிக்கு உண்டென்றால் அது பொருளாதிகாரப் பதிவாலே உண்டானது. அது தொல்காப்பியனால் உருவானது. பழங்காலத்து இல்லறப் பண்பாட்டில் களவும் கற்பும் என இரு பிரிவுகள் இலக்கியங்களில் நமக்குக் கிடைக்கின்றன. களவு வாழ்க்கை பதிவுகள் ஏராளம் இருந்தாலும் மடலேறும் நிகழ்வு பெண்ணியவாதிகளுக்கு ஒரு புதிய கருத்தாக்கத்தைத் தரும்.

"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயார்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான்"
(அ.இ-979)

பிரிவு பொருளுக்காக நடக்கும். அதுவும் தலைவன் மட்டுமே பிரிந்து செல்வான். தலைவி பிரிவுஎன்பதுசங்ககாலசூழலில்நடக்கவில்லை. பொருளுக்காகப் பிரிபவர்களை உயர்ந்தோன் என்று சுட்டுவதால் தலைவி உயர்ந்தவள் இல்லையா? என்கிற கேள்வி எழுகிறது. "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை" (அ.இ - 980) பெண்கள் வெளியூர்களுக்குச் சென்றதாகவும் சான்று இல்லை.

"அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்மயின்" இச்செறிப்பு காலத்து தலைவனுடைய இருப்பிடம் செல்ல முடியாத தலைவியே குறியிடம் சொல்லும் வழக்கத்தில் தலைவி அறிந்த இடமாகவும் தான் செல்லத் தகுந்த இடமாகவும் இருக்கும். தலைவிக்குக் கட்டுபாடுகள் அதிகம் நடந்திருப்பதை இதன் மூலம் அறியலாம். தலைவன் இருக்கும் இடத்திற்குத் தலைவி தனியே செல்வது ஒழுக்கமின்மையைக் குறிக்கும் என்கிற கட்டுபாடும் தலைவிக்கு



## இசைவாசி

இருந்திருக்கிறது. களவு வாழ்வில் பெண் துணிந்து பேசிய பதிவுகள் இல்லையா? இல்லை, அப்பதிவுகள் ஆணாதிக்கத்தால் அழிக்கப்பட்டதா? என்கிற கேள்வி எனக்குள் எழுந்ததன் விளைவால் இவ்வாய்வு எழுந்தது.

தன்னைக் களவு கொண்ட தலைவியை அலரும், அம்பலும் ஊராரால் ஏற்படக் காரணமானதலைவன்ஊர்கூடும்இடத்தில் பனை மட்டைகளைக் குதிரை பாவை போல் செய்து அதன் மீது நின்று தலைவியை அறிமுகம் செய்து பேசுவானாம். இப்படி பேசுவதால் தலைவிக்கு அவப் பெயர் உண்டாகும். அதையே மடலேறுதல் என்கிறோம். ஆனால் தலைவி மடல் ஏறிப் பேசியதாக பதிவுகள் இலக்கியங்களில் இல்லை. மடலேறுதல் என்பது தற்கால சூழலுக்குத் தகுந்தாற் போலச் சொல்ல வேண்டும் என்றால் தர்ணா போராட்டம் என்று சொல்லலாம்.

"சுட்டிஒருவர்பெயர்கொளல்பெறார்" அகத் திணையில்தலைவியையோதலைவனையோ குறிபிட்டுச் சொல்லக் கூடாது என்கிற வரைமுறை உண்டு. அந்த விதியை மீறி பேசும் தலைவனை, அகத்திணைக்கு இலக்கணம் வகுத்த நம்முடைய முன்னோர்கள் எப்படித் தலைவன் ஊர் புறத்தே நின்று தலைவியை குறித்து அத்துனைபேர் முன்னிலையிலும் பேசுவதை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்ற ஐயம் நிழவுகிறது.

ஏழு அகத்திணையில் கைக்கிளை பெருந் திணையைச் சேர்த்துக் கொள்கிறோம். கைக்கிளை என்பது காமம் என்னவென்றே அறியாத இளையவளிடத்தில் பொருத்த மில்லாத காமம் கொள்ளும் தலைவனின் காம உணர்வு ஆகும்.

"காமஞ்சாலா இளமையோள்வயின்
ஏமம்சாலா இடும்பைஎய்தி"

(அ.இ-50)

என்னும் நூற்பா கைக்கிளை என்பதற்கான விளக்கத்தை நமக்குத்; தருகிறது.

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என்கிறோம். பொருந்தாத காமம், பொருள், வயது, உடல்வாகு, கல்வி, குலம், நிறம் என்பனவற்றில் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிப்பதேஆகும்.தலைவி பெருந்திணையில் ஈடுபடவில்லை எனில் தலைவன் மடல் ஏறி என்னுடைய களவை அறிவிப்பேன் எனத் தலைவியை அச்சுறுத்துவான் என்பதை,

"ஏறியமடல்திறம் இளமைதீர்திறம்
தேறுதல் ஒழிந்தகாமத்துமிகுதிறம்"

(அ.இ-997)

என்கிற வரி புலப்படுத்துகிறது.

"சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"

(அ.இ)

தலைவியிடம் சம்பந்தம் வாங்காமலே இயற்கை புணர்ச்சி செய்யும் கொடுமையும் பெண்ணுக்கு நிகழ்ந்திருப்பதற்கானச் சான்று தான் கைக்கிளை என்கிற துறை ஆகும். வன்புணர்வு என்றே அதை குறிப்பிடலாம்.

தலைவி தலைவனுக்கு எதிராகப் பெரும் பாலும் எதிர்த்து நின்று பேசியதில்லை என "சொல்எதிர் மொழிதல் அருமைத்து" (அ.இ - 1056) என்கிற வரி நமக்கு விளக்குகிறது. "மனைப்பட்டு கலங்கிசிதைந்த" களவு தலைவியின் வீட்டிற்கு வெளிப்பட்டவுடன் இச்சொறிப்பு நிகழ்ந்த துயரமும் தலைவிக்கு உண்டு. "பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்" நான் மடலேறி உன்னைப் பற்றி பேசுவேன் எனத் தலைவன் பொய் சொல்லும் இடத்து தலைவி பேச துணிவாள்.

"எத்திணை மருங்கினும் மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான"

(அ.இ-981)

மடலேறி பெண்கள் பேசுதல் பெண்மைக்கு ஒழுக்கமின்மை ஆகும் என்கிறது தொல் காப்பியம். திணை பாகுபாட்டில் உள்ள ஐந்திணைகளிலும் பெண்கள் மடல் ஏறுதல் இல்லை என்பதால், பெண்களுக்கு மடல் ஏறும் உரிமை இல்லையா? என்கிற ஐயம் எழுகிறது.

■

## பாதை மாறும் போதை..

**பாதை மாறும் போதை...**
**பாவம் சேரும் பாதை..**

**நிலை மாறும் வாழ்க்கை..**
**மனிதம் மாறும் செயற்கை..**


**வீணாய் போகும் வியர்வை..**
**விழலாய் போகும் உழைப்பு..**

**கற்ற பாடமெல்லாம் நன்மையற்றுப் போகும்..**
**உண்மை உறவுகள் உதறி விட்டுப் போகும்..**

**வாய்மை நினைவுகள் வலுவற்றுப் போகும்..**
**மானம் மதிப்பற்றுப் போகும்..**

**மனிதம் மண் மறைந்து போகும்..**

**காத்தவூர்க்கவி.**
**எம்.பஹ்த் ஜுனைட்**
**இலங்கை.**




# தமிழுக்குப் பெருமை சேர்க்கும் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்

சந்திப்பு :

**சாரதா க. சந்தோஷ்**

தமிழ் வாசகர்கள்.. ஒரு எழுத்தாளராகத் தங்களை நன்கு அறிவார்கள்..

தங்களின் அறிமுகம் தேவையில்லை என்றாலும்.. தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்காக.. தங்கள் பால்ய பருவத்தின் சில நினைவுகளைப் பகிருங்களேன்..

எனது ஊர் விருதுநகர் மாவட்டத்திலுள்ள மல்லாங்கிணர். கரிசல் பிரதேசமது. அரசு பள்ளி ஒன்றில் படித்தேன். பள்ளி நாட்களில் வெயிலோடு சுற்றி அலைந்தது எனக்கு மறக்கமுடியாத நினைவு. மழை பெய்யும் நாட்களில் சிறுவர்களாகிய நாங்கள் மழை பெய்து முடியும் வரை நனைந்து கொண்டேயிருப்போம் அந்தச் சுகம் மறக்க முடியாதது. இளைஞனாக இருந்த போது கையில் காசில்லாமல் நான் நிறைய பயணம் செய்திருக்கிறேன். அப்போது யார் யாரோ எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். காசியில், ஹரித்துவாரில் சுற்றியலைந்திருக்கிறேன். இப்படி நினைவுகள் ஏராளம்.

தமிழ் சமுதாயத்திற்கு நீங்கள் செய்ததாக நினைத்து.. திருப்திபடும் விடயம் எது..??



உலக இலக்கியத்தின் முக்கிய எழுத்தாளர்களைத் தொடர்ச்சியாக அறிமுகம் செய்து வருவது. ரஷ்ய இலக்கியங்கள் பற்றிப் பேசியும் எழுதியும் வருவது. கரிசல் நிலத்தின் எழுதப்படாத வாழ்க்கையை எழுத்தாக்கியது இந்திய வரலாற்றின் மறைக்கபட்ட உண்மைகளை அடையாளம் காட்டியது. சிறுவர்களுக்காக நூல்கள் எழுதியது. இவையே எனது பங்களிப்பு என்பேன்

இது வரை எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்..?!

128 புத்தகங்கள் எழுதியிருக்கிறேன்

தங்களுடைய 27 வருட கால எழுத்துப் பணியில் நீங்கள் சந்தித்த சவால்கள் என்னென்ன..

எழுத்தாளனாக மட்டும் வாழுவது என்பதுசிரமமானது.அதைத்தைரியத்துடன் எதிர் கொண்டு வாழுகிறேன். அதுவே பெரிய சவால் என்பேன்

சாகித்ய அகாடமி இந்த வருடம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.. இது காலத்தில் கிடைத்த அங்கீகாரமா.. தங்கள் கருத்து..

இல்லை. உரிய காலத்தில் கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன்.

சஞ்சாரம் நாவலை எழுதும் பொழுது ஏற்பட்ட சுவாரஸ்யமான அனுபவம் குறித்து..

சுவாரஸ்யமான அனுபவம் என்று எதுவுமில்லை. கஷ்டமும் பிரச்சனைகளும் கொண்ட நாதஸ்வர கலைஞர்களின் வாழ்க்கையை உடன் இருந்து பார்க்கும் போது நெகிழ்ந்து போய் அழுதிருக்கிறேன். அதுவே உண்மை

நீங்கள் எழுத வரவில்லையென்றால் என்னவாகியிருப்பீர்கள்..?!

பேச்சாளராக ஆகியிருப்பேன்

அடடா.. இந்தக் கருவை.. எழுதாமல் விட்டு விட்டோமேயென.. வேறொரு எழுத்தாளரின் படைப்பை வாசிக்கும் பொழுது ஏற்பட்டதுண்டா..

நிறைய உண்டு. தஸ்தாயெவ்ஸ்கியை படிக்கும் ஒவ்வொரு நேரமும் அப்படி உணரவே செய்கிறேன்.

தமிழுக்கு இதுவரை 2 ஞானபீட



விருதுகளே கிடைத்துள்ளன.. ஏன் இந்த நீண்ட இடைவெளி..

ஞானபீட விருது இந்திய அளவில் ஒருவருக்கே வழங்கப்படுகிறது. இந்தியாவில் 22 மாநிலங்கள் + 7 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. மாநிலத்திற்கு ஒருவர் என்று தேர்வு செய்தால் கூட பல ஆண்டு ஆகும் தானே.. பொதுவாக கர்நாடகமும் கேரளமும் அதிக விருதுகளைப் பெற்றுள்ளது. இந்த விஷயத்தில் அவர்கள் ஒற்றுமையாக யாருக்கு தர வேண்டும் என்று குரல் எழுப்புகிறார்கள். கிடைக்கிறது என்றே நம்புகிறேன்.

தற்சமயம் உலகமெங்கும் இணையத்தின் வாயிலாக ஆயிரக்கணக்கான கவிஞர்கள்.. எழுத்தாளர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.. இந்தப் போக்கை (Trend) எப்படிப் பார்க்கிறீர்கள்..

சந்தோஷமாக வரவேற்கிறேன். விருப்பமான எல்லோரும் எழுதட்டுமே. அது தானே ஜனநாயகம்

உங்களுக்கெனத் தனி வாசகர் வட்டம் உள்ளது.. அவர்களுடன் உரையாடுவதுண்டா..

வாசகர்கள் என்னைத் தேடி வந்து பார்ப்பதை விடவும் நானே வாசகர்களைத் தேடி போய்ப் பார்த்துவிடக்கூடியவன். ஆகவே என்னோடு வாசகர்களுக்கு நேரடியான உறவு எப்போதுமிருக்கிறது. நாங்கள் ஒரு குடும்பம் போலவே பழகுகிறோம்.

நீங்கள் மீண்டும் மீண்டும் வாசிக்கும் இலக்கியம்..

டால்ஸ்டாய். தஸ்தாயெவ்ஸ்கி இருவரையும் திரும்பத் திரும்ப வாசிக்கிறேன்.

சமகால எழுத்தாளர்களில் யாருடைய பாணி உங்களுக்கு மிகவும் பிடித்துள்ளது..

தமிழில் தேவதச்சன். வண்ணநிலவன்,



ஆங்கிலத்தில் ரேமண்ட் கார்வர். இதாலோ கால்வினோ.


உலகச் சந்தையில் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் எந்த அளவிற்கு அறியப்படுகின்றன..

அறியப்படவில்லை மிகக் குறை வான புத்தகங்களே ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளன. ஆங்கிலத்தில் வெளியான புத்தகங்களும் சர்வதேச அளவில் கவனிக்கப் படவேயில்லை. பெரிய விருதுகள் எதையும் பெறவுமில்லை.

நீங்கள் விரும்பி படித்த / படித்துக் கொண்டிருக்கும் ஆங்கிலப் புத்தகம்..

தற்போது நான் ஹருகி முரகாமியின் Killing Commendatore (Haruki Murakami) வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

சுவாரஸ்யமான நாவல் பிற மொழி / பிற நாட்டு எழுத்தாளர் களுக்கும்.. நமது எழுத்தாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் / தொடர்பு குறித்து..




**பனி விழும் இரவில்**
**நனைந்த நிலவென அவள்**
**ஒளிர்ந்த முகத்தில்**
**தெரிந்த அழகு...**
**கொள்ளை கொள்ளும்**

**வானிலவு வந்ததோ**
**தரையினில்**
**தேனிலவாய்**
**முகிழ்த்தே...**
**குளிர்ந்த முகத்தில்**
**வரைந்த ஓவியக்கீற்றுகள்**
**நிழலாய்த்தெரிந்தது**
**அழகாய்..**

**யாரை எதிர்பார்த்து**
**இந்த வருகை?**
**பைங்கிளியின்**
**பாசம் வைத்த**
**பாவலன் யாரோ?**

**தயக்கம்**
**நிறை மனத்தினலாய்**
**மயக்கம் கொண்டே**
**மயங்குகின்றாளே**
**கலக்கம் கொண்டே..**

**ஓ வானிலவே**
**செல்லாய் நீ**
**போய் உரைப்பாய்**
**அவனிடத்தே**
**வஞ்சியின் எண்ணமதை**
**பனி விழும் இரவினில்...**
**தனியளாய்த் ...**
**தவிக்கும் தாரகையின்**
**தனிமையை.**

## கவிஞர் தென்றல் கவி
**(தமிழ்ச்சிட்டு)**

இந்தியாவில் ஆங்கிலத்தில் எழுதுகிறவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி கூடத் தமிழில் எழுதுபவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் தமிழ் அளவிற்கு காத்திரமான எழுத்து அந்த ஆங்கில எழுத்தாளர்களிடம் கிடையாது. அவர்கள் மேல்தட்டு மக்களுக்காக எழுதுகிறார்கள்.

மற்ற நாடுகளில் எழுத்தாளர்கள்.. கவிஞர்கள் ஆய்வாளர்களின் வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது..

மிகச்சிறப்பாக இருக்கிறது. புகழ்பெற்ற நாவல்கள் இரண்டு எழுதிவிட்டால் போதும் அதை வைத்துக் கொண்டு நீங்கள் லட்சாதிபதியாக வாழ முடியும் அவ்வளவு வருமானம் ராயல்டியாகக் கொட்டிக் கொண்டிருக்கும்

அரசுக்கு நீங்கள் வைக்கும் கோரிக்கை..

தமிழகம் முழுவதும் புத்தக அங்காடிகளைத் துவங்குங்கள். அதன் மூலம் புத்தகக் கடை இல்லாத ஊரேயில்லை என்ற நிலை உருவாகவேண்டும்

இனி உங்களின் இலக்கு..

தமிழக வரலாற்றை விரிவான நூலாக எழுத விரும்புகிறேன்.

நீங்கள் நன்றி கூற விரும்பும் மனிதர்கள்..

எனது மனைவி, மகன்கள். குடும்பம். நண்பர்கள் மற்றும் எனது வாசகர்கள். இவர்களுக்கே எனது தீராத நன்றிகள்

இது வரை பொறுமையாகப் பதிலளித்து.. நேர்காணலை சிறப்பித்தமைக்கு மிக்க நன்றி.. தங்கள் எழுத்துப் பணி மென்மேலும் சிறக்க தமிழ்நெஞ்சம் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

■

# கத்தியின்றி - இரத்தமின்றி

கும்பகோணம். நௌஷாத் கான் .லி

சிவாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். கெட்ட பழக்கம் இருந்தால் ஏதாவது குறைப்பாடு ஏற்படும் என்று மது - புகை என்று எந்த பழக்கமும் இல்லாதவனாக இருந்தான். கலப்பினம் செய்யப் பட்ட காய்கறி பிராய்லர் சிக்கன் கூட சேர்த்து கொள்ள மாட்டான். நல்ல படியாக படித்து முடித்தான்.

நல்ல வேலையில் சேர்ந்தான். வீடு வாசல் என்று எல்லாமும் இருக்கிறது, குடும்பத்தில் இவனுக்கென்று எந்த கடமையும் இல்லை. ஒரே பிள்ளை என்பதால் அவன் நினைத்த படியே சரியான வயதில் சிவாவுக்கு பிடிச்ச மாதிரி நல்லா படிச்ச பொண்ணை திருமணம் செய்து வைத்தார்கள். இல்லற வாழ்க்கை இனிதாய் சென்றது.

சில மாதங்களுக்கு பிறகு ...

சிவாவின் மனைவி கிருத்திகா கர்ப்பம் ஆனாள். அவன் மகிழ்ச்சிக்கு வானமே எல்லை. துள்ளி குதித்தான், சந்தோசத்தில் மிதந்தான். இதுவரை கனவாய் மட்டும் இருந்த மழலை செல்வம் கூடிய விரைவில் தன் கையில் தவழ போகிறான் என்பதை நினைத்து மகிழ்ச்சி கொண்டான்.

கிருத்திகாவை அவள் தாய் பார்த்து கொண்டதை போல் கண்ணும் - கருத்துமாய் ஒரு குழந்தையை போல் பார்த்து கொண்டான். சாப்பிட்ட தட்டை கூட எடுக்காதவன் கர்ப்பம் தரித்த மனைவிக்காக வீட்டு வேலைகளை இழுத்து போட்டு கொண்டு செய்தான் ...

பத்தாவது மாதத்தில் ...

ஒரு உயர்தர மருத்துவமனையில் தன் மனைவி கிருத்திகாவை சேர்த்தான். டாக்டர் அந்த கிருத்திகா வலி எடுத்து கத்துறாங்க சுகப் பிரசவம் ஆயிடும்னு நினைக்குறேன் உடனே ICU கொண்டு போகட்டுமா என நர்ஸ் கேட்டாள்...

அடிபோடி பைத்தியக்காரி சுகப்பிரசவம் ஆனா என்னுடைய ஹாஸ்பிட்டலோட பத்தாவது மாடியை எப்படி கட்டுறதாம். வலி நிப்பாட்ட ஒரு ஆண்டி பயாடிக் இன்ஜக்சன் போடு அப்புறம் குழந்தை தலை சுத்தி கிடக்கு சீரியஸ்னு பொய் சொல்லி சிசேரியன் பண்ண ஏற்பாடு பண்ணு. பொண்ணு வீட்ல முதல்ல ஐம்பதாயிரம் டெபாசிட் பண்ண சொல்லு.

நர்ஸ் சொன்ன பொய்யால் சிவாவும் - கிருத்திகா குடும்பத்ினரும் நிலைகுலைந்து போயினர். அந்த இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கி அந்த குடும்பத்தினரிடமிருந்து பணத்தை பெற்று கொண்டு ஆபரேஷன் செய்தனர். அந்த ஆபரேஷனில் ஜன்னி வந்து கிருத்திக்காவும் - வயிற்றில் இருந்த குழந்தையும் இறந்து போயின. அந்த செய்தி கேட்டு சிவா சித்த பிரம்மை பிடித்தவன் போல் தரையில் சாய்ந்தான். இந்தியாவில் கத்தியின்றி - இரத்தமின்றி சுகப் பிரசவம் எப்போது? ■



# ஒழுக்கம்

## எளியோரை அடிமைப்படுத்துவதற்கான சூழ்ச்சி ஆயுதம்!

உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப் படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் - எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி, மற்றவர்கள் வாழ பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல் - அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமே கிடையாது.

கற்பு,காதல்,சத்தியம்,நீதி,ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது, குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள், ''பூச்சாண்டி, பூச்சாண்டி'' என்பது போல், இவை எளியோரையும் பாமர மக்களையும் - வலுத்தவர்களும் தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியே ஆகும்.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்க ஈனமான காரியம் என்பனவெல்லாம் அவைகளைச் செய்கின்ற ஆட்களின் வலிமையையும், அறிவையும் கொண்டு மதிக்கப்படுகிறதேயல்லாமல், வெறும் காரியத்தைப் பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை. சாதாரணமாக, உலகில் “விபச்சாரம்', பொய்', களவு', ஏமாற்றம்” முதலிய காரியங்கள் ஒழுக்கங் கெட்ட காரியங்கள் என்று சொல்லப் படுகிறது. என்றாலும் இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இதுவரையில் உலகத்தில் காண முடியவே இல்லை.

ஒரு சமயம் நம் கண்ணுக்குத் தென்பட வில்லையென்று சொல்வதானால், அப்படிச் சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப் பற்றியே நினைத்துப் பார்த்துத் தங்களுடைய சிறுபிராயம் முதல் இன்றுவரை உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட “ஒழுக்கங்கெட்ட” காரியங்கள் என்பவைகளில் எதையாவது ஒன்றை மனோ வாக்குக் காரியங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா அல்லது செய்யாமல் இருக்கிறார்களா என்று நினைத்துப் பார்த்தால் உண்மை விளங்கி விடும். மற்றும் தங்களுடைய சுற்றத்தார்,நண்பர்,சுற்றியுள்ள அறிமுகமான ஜனங்கள், நன்றாய்த் தெரிந்த அன்னியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன், கற்புடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள்.

உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்து வருகின்ற தொழில்களில் முக்கிய மானவைகளாகக் காணப்படுவன விவசாயம், வியாபாரம், கைத் தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலைமாதர் தொழில் ஆகியவை முதல், குருத்துவம், சன்னியாசம், துரைத்தனம், தேசியம் ஈறாக உள்ள அனேக துறைகளாகும். இவற்றின் மூலமே மக்கள் பெரும்பாலும் வாழ்கிறார்கள் என்பதை நாம் பிரத்தியாட்சத்தில் பார்க்கிறோம். இந்த மக்களில் யாராவது ஒருவர், ஒழுக்கமாக நடந்து கொள்வதை நாம் பார்க்கிறோமா? ஒழுக்கம் என்றால் என்ன, அது எது என்கின்ற விஷயத்தில் நாம்

இப்போது பிரவேசிக்கவில்லை.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலை யிலேயே எஜமான் செய்துவிட்டு, வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லு கிறான். இதுபோலவே, எல்லாத் தொழில் துறையிலும் உள்ள மக்களும், அவரவர் வாழ் நாட்களில் ஒழுக்க ஈனமாக நடந்து கொண்டே மற்றவர்களை ஒழுக்க ஈனர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவை நாம் ஒரு குறிப்பிட்ட ஒரு சிலரிடம்மாத்திரம்இருப்பதாய்ச்சொல்லவரவில்லை. ஒழுக்கமாய் மக்கள் யாராலும் நடக்க முடியாது என்றும்; ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும்; ஒழுக்கம் என்று சொல்லி வருவதெல்லாம் எளியோரையும், பாமர மக்களையும், அடிமைத்தனத்தில் இருத்தி வரப்பயன்படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்திற்குப் பயன்படக்கூடியது அல்லவென்றும் சொல்லு வதற்காகவே எடுத்துக்காட்டுகின்றோம்.

உண்மையிலேயே “ஒழுக்க ஈனம்” என்பது ஒன்று உண்டு என்றும்; அது - திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய குணங்கள் தாம் என்றும் சொல்வதாய் இருந்தால், அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாயக் குடி கொண்டிருக்கும் இடங்கள் அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும். மனிதர்களுக்குத் துன்பம் இழைத்து, அவர்களது அமரிக்கையைக் கெடுத்து, ஏமாற்றி, வஞ்சித்து வாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களே ஆகும். இது அந்தந்தத் துறையைக் கைகொண்ட ஆட்களை மாத்திரம் அல்லாமல், அந்தந்தத் துறைகளுக்கே ரத்தமும், சதையும், எலும்பும் போலக்கலந்து இருக்கும் காரியங்களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக் கண்டு எந்த மகனும் அசூசைப்படுத்துவதே இல்லை. இவர் களிடத்தில் மக்கள் வெறுப்புக் காட்டுவதும் இல்லை. அதற்குப் பதிலாக, இந்தக் கூட்டத்தாருக்குத்தான் நாட்டிலே மக்களிடம் செல்வாக்கும், மதிப்பும் இருந்து வருகின்றது. மனிதசமூகத்திற்கு எலும்புருக்கி வியாதி போன்ற இந்தக் கூட்டம், மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி வருவது என்பது, மக்களின் அறிவீனத்தையும் பலமற்ற தன்மையையும் காட்டுவதேயல்லாமல் வேறில்லை. வாழ்க்கைத் துறையின் ஒழுக்கம்தான் இம்மாதிரி இருக்கிறதென்றால் மற்றபடி, பக்த, பரமார்த்திகம், ஆத்மார்த்தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதைக் காணமுடிகின்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நமது அபிப்பிராயம்.

**— பெரியார்**

# மனிதர்களாய் வாழுவோம்

கற்ற கல்வி சிறந்திடவே
கட்டிக்காப்போம் ஒழுக்கத்தினை

ஒழுக்கத்தோடு நாம் வாழ்ந்தால்
ஓங்கி இருப்போம் பாரினிலே

ஒழுக்கம் கல்வி இவிரண்டும்
நம் கண்களென நினைத்து வாழ்வோமே

ஒழுக்கம் என்பதை துறந்துவிட்டு
கல்வி கற்றும் பயனில்லை

ஒழுக்கம், கல்வி இவ்விரண்டை
இரண்டுற கலந்து வாழ்ந்திடுவோம்

மனிதம் கொண்ட மனிதர்களாய்
இவ்வுலகில் நாமும் நிலைத்திடுவோம்!

ரத்னா
திருநெல்வேலி

## தமிழ்நெஞ்சம் இதழுக்காகப்

# பாவலர் கருமலைத்தமிழாழன்

## அவர்களுடன் நேர்காணல்

புலவர் பாவலர் கருமலைத்தமிழாழன் தமிழன்னை வார்த்தெடுத்த பெருமலை. தங்கப்பாக்களால் தமிழ்மகளை அலங்கரித்த பாமகன். இவரைப் பற்றிச் சொல்வதானால் வெள்ளிடைமலை போன்றதுதான். தமிழ் உலகோர் அறிந்த தவப்புதல்வர் இவர். இவரைப் பற்றிய அரிய செய்திகள் பல.

கிருட்டிணகிரியில் பிறந்த கி.நரேந்திரன் தமிழில் எம்ஏ. எம்.எட்.எம்.பில் எனப் பல பட்டங்களை வாங்கியவர். தமிழாசிரியராக முப்பதைந்து ஆண்டுகளாக அரிய பணியாற்றியவர். மாணவச் செல்வங்கள் மனதினிலே மலையினும் மாணப் பெரிதாக மதிக்கப்படுபவர். இவர் எண்ணிலடங்க கவிதை நூற்களையும் பல ஆக்கங்களையும் படைத்துள்ளார்.

இவர் எழுதாத பத்திரிகைகள் கிடையாது என்று சொல்லுமளவிற்கு பாரதிதாசனின் குயில் இதழிலிருந்து தமிழ்நெஞ்சம் வரை நாளிதழ், மாத இதழ் என ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். பெற்ற விருதுகளை எண்ணிப்பார்த்தால் நட்சத்திரக் கூட்டங்களாய் நம் கண்முன்னே விரியும். பாவேந்தர பைந்தமிழ்ச் செல்வர் 2002 விருது முதல் தமிழ்ச்செம்மல் விருது 2017 வரை வருடந்தோறும் தொடர்ந்து சிறப்பிக்கப்பட்டு வருகிறார் என்றால் அது அவரின் மணிமகுடம் என்றே கூறலாம். இவரைப் பற்றிய புரிதலோடு...



**தங்கள் இயற்பெயர் அடுத்துக் கருமலைத் தமிழாழனாக எங்ஙனம் உருவானீர்கள் ?**

என்னுடைய தந்தையார் சுவாமி விவேகானந்தர் மீது மிகுந்த பற்றுடையவர். அதனால் அவருடைய பெயரையே எனக்கு நரேந்திரன் என்று சூட்டி மகிழ்ந்தார். தொடக்கத்தில் நரேந்திரன் என்ற பெயரில் தான் கவிதைகள் எழுதிவந்தேன். நான் புகுமுக வகுப்பு படிக்கும் பொழுது சென்னையில் 1968 இல் உவமைக் கவிஞர் சுரதா அவர்களைச்

சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் எழுதிய கவிதைகளை அவரிடம் காட்டினேன். இன்னும் தமிழை ஆழமாகப் படி என்று கூறி என்னைத் தமிழாழா என்று அழைத்தார். தமிழாழா என்ற சொல் என்னுள் பதிந்து விட்டது. அதனையே புனைப்பெயராகக் கொண்டால் என்னவென்று தோன்றியது. அதன் விளைவாகத்தான் தமிழாழன் என்ற பெயர் உருவானது. நான் பிறந்த ஊர் கிருட்டினகிரி. இது வடமொழியாக இருந்ததால் அதனைத் தமிழ் படுத்திக் கருமலை என்று மாற்றித் தமிழாழனோடு கருமலையைச் சேர்த்து கருமலைத்தமிழாழன் என எழுதத் தொடங்கினேன். கருமலைத்தமிழாழன் என்ற பெயரில்தான் என் முதல் கவிதை 1969 இல் குயில் ஏட்டில் வெளிவந்தது.

**தமிழாசிரியராக முப்பது ஆண்டுகள் பணிபுரிந்ததோடு, நல்லாசிரியர் விருதும் பெற்றிருக்கிறீர்கள் மகிழ்ச்சி. மேலும் கவித்தொண்டை எத்தனை காலமாகத் தொடர்ந்து செய்கிறீர்கள் அது குறித்துச் சொல்லுங்களேன்.?**

நான் கிருட்டினகிரி கலைக்கல்லூரியில் 1968 1969 இல் புகுமுக வகுப்பு படிக்கும் பொழுது, திரு.கண்ணன் அவர்கள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். அவர் தாம் எனக்குத் தமிழ் பாடம் நடத்தினார், அவரிடம் நான் கவிதை என்று நினைத்து எழுதியவைகளைக் காட்டினேன். அதைப்படித்துப் பார்த்துவிட்டு உன்னிடம் கவித்துவம் இருக்கிறது எப்படி எழுதுவது என்று நான் கற்றுக் கொடுக்கிறேன் அதன் படி எழுது என்று எனக்கு யாப்பினைக் கற்றுக் கொடுத்தார். அவர் கற்றுக் கொடுத்த யாப்பின் அடிப்படையில் "இயற்கை தமிழர்க் கிறை" என்ற குயில் ஏட்டின் வெண்பா ஈற்றடிக்கு வெண்பா எழுதி அனுப்பினேன். அந்த வெண்பா தான் 1969 இல் முதன் முதலில் அச்சில் வெளிவந்த என் கவிதை. அதன் பின்பு இன்று வரை ஐம்பதிற்கும் மேற்பட்ட நாள், வார, மாத ஏடுகளில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் வெளிவந்துள்ளன. தமிழகத்திலிருந்து வெளிவரும் பெரும்பான்மையான ஏடுகள் அனைத்திலும் என்னுடைய கவிதைகள் வெளிவந்துள்ளன.

என்னுடைய கவிதைப் பணி குறித்து சன் தொலைக்காட்சி "வணக்கம் தமிழகம்" பகுதியில் என் நேர்காணலை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஒளிபரப்பியது. அதே போல் கலைஞர் தொலைக்காட்சியும் "சந்திக்கும் வேளையிலே" நிகழ்ச்சிப் பகுதியில் என் நேர்காணலை ஒது மணி நேரத்திற்கும் மேலாக ஒளி பரப்பியது. பொதிகைத் தொலைக்காட்சி கவிதைக் கச்சேரி நிகழ்ச்சியில் என்னுடைய கவிதைகளை ஒளிபரப்பியது.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளிலும், இந்தியாவில் பல மாநிலங்களில் இயங்கும் தமிழ்ச் சங்கங்களின் அழைப்பிலும், தமிழகத்தின் பெரும்பான்மையான ஊர்களி லும் சுமார் ஆயிரம் கவியரங்குகளில் பங்கு பெற்றுள்ளேன். தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாக கவிதைப் பணி ஆற்றிவருகிறேன்.


**நீங்கள் ஏறாத மேடையில்லை, கவி பாடாத பாட்டுமில்லை எனும் அளவிற்குப் பாரெங்கும் நடக்கும் நிகழ்வுகளில் அயராது கலந்து கொள்கிறீர்கள். அவற்றில் மறக்க முடியாத தருணங்களைப் பகிருங்கள் ?**

(அ) கவிஞர் இளமாறன் அவர்கள் பாவேந்தர் பாசறை மூலம் பாவேந்தர் அவர்களின் பிறந்த நாளை அவர் பிறந்த இல்லத்தில் சிறப்பாக நடத்தி வந்தார். அதில் கலந்து கொண்டு பாவேந்தர் இல்லத்தில் கவிதை பாடியது.

(ஆ) மலேசியா கவிஞர் ஐ, உலகநாதன் அவர்கள் சிங்கப்பூரில் துவக்கி வைத்த மாதவி இலக்கிய மன்றத்தின் ஐம்பதாமாண்டு விழாவில் பங்கு கொண்டு கவிதை பாடியது.

(இ) இலங்கை தடாகம் இலக்கிய வட்டம் நடத்திய உலக அளவிலான கவிதைப் போட்டியில் நான் பெற்ற முதல் பரிசினைப் பெற இலங்கை மட்டகளப்பு ஒட்டமாவடியில் நடைபெற்ற விழாவில் இலங்கை மத்திய அமைச்சர்களின் முன்னிலையில் விருது பெற்றுக் கொண்டு கவிதை பாடியது.

(ஈ) என்னுடைய ஐம்பதாண்டு கால இலக்கியப் பணியை நூலாக எழுதி அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், மலேசியாவின் மலாயாப்



# நதிக்கரை ஞாபகங்கள்

**மழை பெய்த மலைகளிலே**
**மறுகி ஓடும் நீரோடை;**
**குறுகிய தோர் காட்டாறு**
**கூடி வீழும் அருவிகளும்;**
**அடித்து வந்த மூலிகையின்**
**அளவற்ற நறு மணங்களுடன்;**
**பரவி ஓடி வந்தநதி**
**படர்ந்ததே சம வெளிகளிலே!**

**கரை கட்டும் சரிகைச்சேலை**
**காற்றிலசைந்து நடந்தாற் போல்;**
**மணல் படுகை மீதெல்லாம்**
**நதியாய் ஓடும் நீர்ச்சேலை.**
**இருகரையை வரிந்து கட்டி**
**இசைந்த பச்சைச் செழிப்பூட்டி;**
**இகமெல்லாம் இழையோடி நிற்கும்**
**இன்னுயிர்க் கமுதாகும் இன்நதியே!**

**ஓடிக் களிக்கும் நாளெல்லாம்**
**உவந்து நீரால் அமுதூட்டும்;**
**உலர்ந்து கிடக்கும் நாளினிலும்**
**ஊற்றா யிங்கு உவப்பளிக்கும்;**
**ஆடி அசைந்து கரைகளெல்லாம்**
**அமுதுக் கிண்ணம் ஆக்கியபின்;**
**தேடி ஓடிச் சேர்ந்தடையும்**
**தேர்ந்த ஆழி அன்பனுடன் !**

**– கு. கமலசரஸ்வதி**

பல்கலைக்கழகமும் இணைந்து வெளியிட்டது. வெளியீட்டு விழாவை மலேசியா நாட்டு மலாயப் பல்கலைக் கழகத்தில் நடத்திப் பாராட்டியதோடு, அந்நாட்டு பாராளுமன்றத்தில் வரவேற்பு அளித்து சிறப்பு செய்தது. தமிழ்நெஞ்சம் (திங்களிதழ் சார்பாகவும்) பொன்னாடைப் போர்த்தி சிறப்பித்தது.

இவையெல்லாம் மறக்க முடியாத நிகழ்வு களாகப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

**நீங்கள் பெற்ற விருதுகள் எண்ணிலடங்கா... அவற்றில் பெரும் பேறாக நினைக்கும் விருதுகளைப் பற்றிக் கூறுங்கள்.?.**

நான் பெற்ற நூற்றுக் கணக்கான விருதுகளில் பாவேந்தர் பாசறை வழங்கிய “பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர்”, சென்னை கவிதை உறவு அமைப்பு வழங்கிய “பைந்தமிழ்ச் செல்வர்”, தமிழறிஞர் இலக்குவனார் நூற்றாண்டு விழாவை ஒட்டி வழங்கப்பட்ட “இலக்குவனார் விருது”, ஈரோடு தமிழன்பனாரின் 80 ஆம் ஆண்டு பிறந்த நாளில் அவர் பெயரில் வழங்கிய “தமிழன்பன் விருது”, இலங்கை தடாகம் இலக்கிய வட்டம் வழங்கிய “கவியருவி” விருது, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வழங்கிய “சிந்தனைச் சிகரம்” விருது, தமிழக அரசு வழங்கிய தமிழ்ச் செம்மல் விருது ஆகியன எனக்கு மேலும் புகழைச் சேர்த்த விருதுகளாகும்.

**ஒய்வும் சலிப்பும் அறியா உங்களின் இலக்கியப் பங்களிப்பை விவரியுங்கள் ?**

**உங்கள்இலக்கியப்பயணம்ஒருதொடர்கதை... அக்கதை எங்கிருந்து தொடங்கி எதுவரை சென்று கொண்டிருக்கிறது ?**

என்னுடைய இலக்கியப் பயணம் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த 1969 ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கி விட்டது. என்னுடைய இலக்கிய ஆசான் கிருட்டினகிரி தத்துவக் கவிஞர் பெருமாள் ராசு அவர்களால் கிருட்டினகிரி தமிழ்ச்சங்கத்தின் மேடையில் தொடங்கிய இலக்கியப் பணி, துவக்கத்தில் அண்டை ஊர்களான தருமபுரி, சேலம் எனச் சென்று தனித்தமிழ் அறிஞர்களான தேவநேயப் பாவாணர்,

பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் இயங்கிய உலகத் தமிழ்க் கழகத்தின் தருமபுரி மாவட்டப் பொறுப்பாளராக அவர்களுடன் இணைந்து சுற்றியதில் விரிவடைந்தது. சிறிது சிறிதாக தமிழகத்தின் அனைத்துப் பகுதிகள், அண்டை மாநிலங்கள், வெளி நாடுகள் என விரிவடைந்தது.

**உங்கள் இலக்கியப் பணிக்கு நிச்சயமாக உங்கள் குடும்பத்தினரின் உதவியும் அன்பும் அளப்பரியதாக இருந்திருக்க முடியும். உங்கள் குடும்பத்தினர் பற்றிக் கூறுங்கள்?...**

என்னுடைய குடும்பம் நடுத்தரக்குடும்பம். அப்பொழுது சேலம் மாவட்டத்தில் இருந்த கிருட்டிணகிரியில் வாழ்ந்து வந்தோம். பின்பு தருமபுரி மாவட்டமாகப் பிரிந்து தற்பொழுது கிருட்டினகிரி மாவட்டமாகத் திகழ்கிறது. எங்களது குடும்பத்திலேயே முதன்முதலில் பள்ளிப் படிப்பை (பதினோராம் வகுப்பு) முடித்தவர் என் தந்தையார் மு.கிருட்டிணன் ஆவார்.

என் தந்தை ஓவர்சியராகப் பணியில் சேர்ந்து, ஊராட்சி ஒன்றியப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். என்னுடைய தாய் திருமதி. இராசம்மாள் எட்டாம் வகுப்பு வரைப் படித்தவர். தற்போதைய தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் பிறந்து வளர்ந்தவர். 1949 இல் சீர்திருத்த முறையில் என் தந்தையின் திருமணம் நடைபெற்றது.

என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்ந்து எழுவர். பெண்கள் மூவர், ஆண்கள் நால்வர் ஆவர். 1.திலகவதி 2.விமலா 3.அம்சவேணி 4.மனோகரன் 5.இரகுராமன் 6.இரவிக்குமார் 7.நரேந்திரன் (கருமலைத்தமிழாழன்). நான் மேனிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவன்.

என்னுடைய துணைவியார் திருமதி. வசந்த குமாரி அவர்கள் கருநாடக மாநிலப் பெங்களூரைச் சேர்ந்தவர். எங்களுக்குத் திருமணம் நடந்தபோது, அவருக்குத் தமிழ் தெரியாது, எனக்குக் கன்னடம் தெரியாது. திருமணத்திற்குப் பின்பு நான் அவருக்குத் தமிழைக் கற்றுக்கொடுத்தேன். அவர் வாயிலாக நான் கன்னடம் கற்றேன். தற்பொழுது இரு மொழிகளில் இருவரும் பேசிக்கொள்கிறோம்.

எங்களுக்கு இரு பெண்பிள்ளைகள். 1.தென்றல் 2. முல்லை. ஒரு மகன் பிரதீப் (எ) இளஞ்செழியன். குழந்தைகள் அனைவருக்கும் தமிழ்,தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளும் நன்றாகத் தெரியும்.



# சொக்கிடும் அழகு

நேரிசை ஆசிரியப்பா

முத்தம் கொடுத்ததும் துடைத்துக் கொள்ளும்
பத்தாம் பசலிப் பாலகராய்ப் பறவைகள்
மொத்தம் உண்டபின் மூக்கினை
சுத்தம் செய்வது சொக்கிடும் அழகே!

இராஜ் குமார் ஜெயபால்

**தங்களின் கவிதைகளின் பாடுபொருள் பற்றிக் கூறுக?**

தமிங்கிலராக வாழும் தமிழர்களின் உள்ளங்களில் தமிழுணர்வு ஏற்படுத்துதல். தமிழ் மொழியின் சிறப்பினை விளக்குதல். தகுதிக் கேற்ற உயர் நிலையில் தமிழும் தமிழரும் இல்லாத நிலையைப் போக்குதல், தமிழர் நிலை உயர மக்களும் அரசும் செய்ய வேண்டிய பணிகள், தமிழ் இலக்கியங்களின் பெருமை, பழமை, தமிழ் வளர்த்த சான்றோர் தம் தொண்டினை எடுத்துரைத்தல், இயற்கையைப் பாதுகாத்தல், மனிதநேயம் போன்ற தளங்களைப் பாடு பொருளாகக் கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளேன்.

**எதிர்காலம் குறித்து எந்த மாதிரியான நிலைப்பாடு கொண்டிருக்கிறீர்கள் ?**

இன்றைய நிலையில் பெரும்பான்மையான தமிழர் கள் தமிங்கிலர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழறிஞர்கள் மறைமலையடிகளார், கி.ஆ.பெ. விசுவநாதம், பாவாணர், பெருஞ்சித்திரனார் ஆகியோர் வளர்த்த தனித்தமிழ் இயக்கத்தை மீண்டும் செயல்படவைத்துப் பிறமொழி மோகத்தை அகற்ற வேண்டும். அதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன். அவர்கள் உருவாக்கிய உலகத் தமிழ்க் கழகத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும்.

**ஹைக்கூ**

இருட்டில் தான்
காணமுடிகிறது
விண்மீன்கள்

கரித் துணியில்
கனன்று கொண்டிருக்கிறது
பெண்ணியம்

எல்லோர் வீட்டிலும்
பெண்களுக்கான இடம்
அடுப்பங்கரை

புதுவைக் குமாரி

சமுதாயத்தில் நிலவிவரும் சாதி பாகுபாடுகளின் கொடுமைகளை மையமாக வைத்து மலர்விழி என்ற காவியத்தை எழுதினேன். தற்போதைய நாட்டு நடப்புகளை மையக்கருத்தாக அமைத்து ஒரு காவியம் எழுத முடிவு செய்துள்ளேன்.

இதுவரை வெளிவந்துள்ள என்னுடைய நூல்கள்

1. *நெஞ்சின் நிழல்கள்*
2. *காவியத் தலைவன்*
3. *காற்றை மணந்த கவிதைகள்*
4. *நீர்க்கால்கள்*
5. *அருள்மிகு மரகதாம்பிகை சுந்திரசூடேசுவரர் பாமாலை*
6. *தமிழவேள் தமிழ்ப்பாவை*
7. *ஒப்பனைப் பூக்கள்*
8. *புதுக்கவிதையில் தொன்மவியலாய்வு*
9. *மண்ணும் மரபும்*
10. *திருக்குறள் (எளிய உரை)*
11. *வீணை மத்தளமாகிறது*
12. *அருள்மிகு மரகதாம்பிகை சந்திரசூடேசவரர் கோயில் தலவரலாறு*
13. *பண்பில் வாடை*
14. *மரபின் வேர்கள்*
15. *புதிய குறுந்தொகை*
16. *வேரின் விழுதுகள்*
17. *களம் வெல்லும் கலைஞர்*
18. *மலர்விழி (காவியம்)*
19. *சுவடுகள்*
20. *உன்முகமாய் இரு*
21. *கல்லெழுத்து*
22. *செப்பேடு*
23. *அகமுகம்*


கிடைக்குமிடம்:
வசந்தா பதிப்பகம்
2 16, ஆர்.கே. இல்லம்,
முதல் தெரு, புதிய வசந்த நகர்,
ஒசூர் 635 109,
கிருட்டினகிரி மாவட்டம்.

தொலைபேசி : 04344 245350
அலைபேசி : 09443458550
மின்னஞ்சல் : karumalaithamizh@gmail.com

# கிளிக்கனவு



- எம்.எம்.தீன்

மேகலா நாளிதழை எடுத்துக் கொண்டு தினமும்அமர்ந்துபடிக்கும்பச்சைக்கிரானைட் திண்டில் அமர்ந்தாள். அதிகாலையில் இரண்டு இட்லிப்பூக்கள் ஒன்றுக்கொன்று எதிரிட்டபடி விழுந்திருந்தன. கனத்த இதழ் வெள்ளை பூக்கள் மடிந்து கூம்புக்குழாய் போல காம்பினை ஊன்றி நிமிர்ந்து இருந்தன. ஐந்து இதழ்களும் குவியும் இடத்தில் மங்களகரமான மஞ்சள் புள்ளி பொட்டு போல இருந்தது.

கொஞ்சம் கையால் இரு உதிர் பூக்களையும் நகர்த்தி விட்டு பார்த்தாள். முதலில் இருந்த பூக்களின் அழகு திண்டில் இல்லை. காலையில் கிரானைட் திண்டின் மீது இருந்துதான் படிக்கப் பிடிக்கிறது. சில காரியங்கள் அங்கங்கே அப்படியப்படியே நடக்க வேண்டுமென்றுதான் மனது விரும்புகிறது. காலையில் காபியுடன் பேப்பர் படித்தால் செய்திகளுக்கு ருசி வரும் போலத்தான் இருக்கிறது. நீண்ட இரவின் குளிர்ச்சியில் ஈரம்பாரித்திருந்த திண்டு பிட்டத்தில் குளிர் உரைக்க அமர்ந்தாள். மரத்தை உலர்த்திய காற்று மீண்டும் ஒரு பூவை அவளது மடியில் உதிர்த்தது. ஏறிட்டு பார்த்த போது மரம் வெள்ளையாய் சிரித்தது.

செய்திகளில் கவனம் இழையவில்லை. தூங்காத இரவின் மனம் அவளைப் பற்றிக் கொண்டது. இரவில் அவன் அனுப்பிய. குறுஞ்செய்திகளில் அவன் சொல்லிய விசயங்கள் எல்லாம் அவளை நேசம் தாண்டி காமம் பக்கம் ஈர்க்கும் வகையில் எப்போதும் போல தட்டையாய் இருந்தன. மூன்று வருடங்களுக்கு முன்பு காதலிக்கும் போது சொல்லிய அதே சொல்லாடல்கள். அப்போது மேகிக்கு மெயிலில் «கனவுகளின் காடு நீ» என்றதும், «பாதுகாக்கப்படும் விதை நெல்», என்றதும் சரிதான். அந்த சொற்கள் அவளைக் கைபிடித்து காடு நோக்கி இழுத்து சென்றதும், அப்போது கவிதை எழுதுவதாய் எண்ணிக் கொண்டுடைரிகளைநிரப்பியதும்இனிமையாக இருந்தது. இப்போது அந்தச் சொற்களின் பலம் இழந்து, குன்றிப்போய் வெற்று வார்த்தைகளாய் வெளிறிப் போனதை அவன் ஏன் உணரவில்லை என்று எண்ணினாள். காமம் தாண்டிய பின்பு மனம் வேறு எதையோ நாடுகிறது என்பதைக் குறித்து அவன் சிந்தித்ததாகத் தெரியவில்லை. அவளுக்கு இன்னும் உடலுக்குள் ஒளிந்து விளையாட என்ன இருக்கிறது என்பதும் விளங்கவில்லை.

மூன்று வருட தாம்பத்திய வாழ்க்கையில் அவன் மூன்று மாதங்கள்தான் உடன் இருந்திருக்கிறான். மீதி நாட்கள் வெளி நாட்டில் கழிந்துவிட்டன. மேகிக்கு அவனில்லாத காலங்களில் காமம் சார்ந்த எண்ணங்களில் பெரிய ஈர்ப்பும் இல்லைதான்.

அவன் அவளோடு இருக்கும் போதெல்லாம் மூர்க்கமாய் பசியப்பசிய ஏறிவிழும் செங் கிடாயைப் போலத்தான் இருந்திருக்கிறான். அவனுக்கான ஞானத்தையும், ஒளியையும் அவள் காணவேயில்லை. காதலிக்கையில்

அவனது கவிதை சொல்லாடல்கள் மேகலாவைக் கொத்தி கொத்தி தூக்கிச் சென்று விடும். அதில் அவள் கரைந்திருந்தாள். ஆனால் திருமணத்திற்கு பின்பு அந்த பழையவனைத் தேடித் தேடிப் பார்த்தும் காணாது திகைத்தாள்.

அவன் கவிதையில் மலர்ந்த எந்தப்பூவும் நேரில் மலரவில்லை. அவளது வானம் முழுவதும் திருநீறு பூசிய நெற்றி போல வெளுத்துக்கிடந்தது. முத்து கான சபாவில் கவியரங்கில் பாடி விட்டு திரும்புகையில் எதிர்ப்பட்ட கொள்ளையர்கள் அவள் கைப்பையை பிடுங்கியபோது அவன் பெரிதாக பேசிவிடவில்லை. அவள் தான் இந்தியில் பேச அவன்களும் இந்தியில் பதில் சொல்ல ஏதோ ஒரு நேசத்தில் விட்டுவிட்டு ஓடிப் போனார்கள். கொள்ளையடிக்கப் போகிறார்கள் என்று தெரிந்த பின்பும் எந்த எதிர்வினையும் செய்யாமல்தானே இருந்தான் என்று தோன்றுகிறது. பல தடவைகள் அவனது மௌனத்தைக் குறித்து எண்ணிப் பார்த்து பதில் தேடி இருக்கிறாள். இல்லை அவன் ரொம்ப டீஸண்டான பார்ட்டி என்பதைத்தவிர வேறு ஆதர்சமான பதில் அந்த சம்பவத்திற்கு இல்லை. அதன்பின்னும் அவனை மேகிக்கு மிகவும் பிடித்துதான் இருக்கிறது.

''ஜன்னலோரத்தில் பார்வையால் வளர்ந்தது காதல் கொடி'' என்ற கவிதை அவளைகிறக்கிப்போட்டது.அவள்அதற்கு ஒரு பதில் கவிதை எழுதுவதற்காய் பல நோட்டுகளை தியாகம் செய்திருக்கிறாள். அந்தக் காதல் கொடிதான் வானம் ஏறி வாழ்க்கையைக் கொடுத்தது.

திருமணத்திற்கு பின்னாலான அவன் மெயில்கள்வெறும்வார்த்தைப்பூங்கொத்துகளாக இருக்கின்றன. கவிதைகளில் வாழ்க்கை இல்லை அந்த சூன்யவெளியில் வாழ்க்கை இல்லை என்று கடந்துதான் போகவே விரும்புகிறாள்.

நல்லவேளை வெளிநாடு போவதற்கு முன்பு அவன் ஒரு ஞாயிற்றுக்கிழமை பிராட்வேக்கு அவளை அழைத்துச் சென்று விற்பனைக்கு வந்த பறவைகளையும் விலங்குகளையும் காட்டினான். முக மெல்லாம் சிறு செந்தூவல் இறகுகள் மூடிய குறுங்கோழியை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் வாங்கி வீட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்றெல்லாம் எண்ணவில்லை. அது உயரமான ஐந்து அடி மரக்குதிரையில் தலை இறகுவிரிகோலமாய் நின்று கொண்டிருந்தைப் பார்க்க அதிசயமாய் தெரிந்தது. விலை அதிகமாய்ச்.சொன்னான் உரிமையாளன். எல்லோரும் அழகைப் பார்த்துவிட்டு விலை கேட்டுக் கலைந்தார்கள்.

அவனுக்குசிறுபறவைகளும்விலங்குகளும் வளர்க்கப் பிடிக்கும். அதற்காகவேணும் கழுத் தாரம் பார்த்து தேர்ந்தெடுத்து ஒரு கிளியை வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனான். அதற்கான அலுமினியக் கூண்டு ஒன்றையும் வாங்கினான். கிளியை எப்படி வளர்ப்பது என்பது குறித்து அவளுக்கு பயம் ஏற்பட்டது. பத்து நாட்கள் அதற்கு பழங்கள் கொடுக்கும் நேரம், நெல், மற்றும் உணவு கொடுப்பது என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். இப்போது கிளி அவள் தலையைச் சுற்றிப் பறந்து கொண்டே இருக்கிறது. அவளை காலையிலேயே கத்தி எழுப்பி விடுகிறது. கைவிரலில் நின்றுகொண்டு சிறுவெள்ளை இமையை மூடிமூடித் திறக்கிறது. அதனோடுதான் இருக்கணுமாம். அவள் படிக்கும் போதும், வேலைசெய்கையிலும் அதற்கு கோபம் வந்து விடுகிறது. அது பழங்களையும், தானியங்களையும் தின்னலாமாம். அவளுக்கென உணவு தயாரிப்பது அதற்கு பிடிக்காததாய் இருக்கிறது. தீயைக் கண்ட அச்சமும், மசாலா வாசமும் பிடிக்காமல் கூட இருக்கலாம். அப்படியே கூண்டுக்குள் பழம் கொடுத்து பூட்டிவிட்டுத்தான் சமையலறைக்குள் நுழையமுடியும்.

அவன்தான் கிளிக்கு பெயர் வைக்க வேண்டும் என்றான். என்ன பெயர் வைக்கலாம் என்று அவள் கேட்டுவிட்டு அவனேபலபெயர்களைச்சொல்லிசொல்லி அழித்தான். அலைபேசியில் சொல்லும் சொற்களை அழிப்பதற்கு அழிப்பான்கள் தேவையில்லைதானே. எத்தனை ஆயிரம்

தடவையும் திருத்தி விடலாம். கிளி வீட்டுக்கு வந்து ஒன்பது மாதங்கள் கடந்துவிட்டது. அவன் அழிக்காத பெயர் ஒன்றை தேடிக்கொண்டே இருக்கிறான். மேகலா அதற்கு தற்காலிகமாக பாப்பா என்று பெயர் வைத்துக் கொண்டாள். சிலசமயம் ஒரு கிளியை வளர்க்கிறோம் அவ்வளவுதானே, அதற்கு பெயர் ஏன் தேவைப்படுகிறது.? என்று எண்ணுவாள். கிளியை கிளி என்று அழைக்காமல் வேறு பெயரில் அழைப்பது சரியானதா? அது கிளியை அந்நியப்படுத்தி விடாதா என்றும் தோன்றும். கிளி என்று அழைத்தால் தன்னை மட்டும் பெயர் வைக்காது பேர் சொல்லி அழைக்கிறார்களே என்று வருத்தப்படலாம் என்றும் தோன்றியது. மீண்டும் தலை கவிழ்ந்து நாளிதழைப் படிக்க முயன்றாள். வீட்டிற்குள் இருந்து கிளி அவளைக் காணாததால் கத்த ஆரம்பித்தது.

கிளியும் பெண்ணைப் போலத்தான். சளசளவென்றே பேசிகொண்டே இருக்க விரும்புகிறது சிலசமயம் மகிழ்ச்சியாகவும், சிலவேளைகோபமாகவும்பேசும்.கொடுமை என்னவெனில் சிலபொழுதுகளில் அவளை வேண்டுமென்றே கேலி செய்வது போல கலகலவென சிரிக்கும். கூண்டுக்குள்ளே இருக்கையில் அதன் சிரிப்பு அடங்கவே அடங்காது. திறந்து விட்டாலோ அவளைச் சுற்றிச் சுற்றி பறந்து கேலி செய்யும். இதற்கு என்ன கோட்டி கீட்டி ஏதும் பிடித்து விட்டதா என்பது போலிருக்கும். கிளியின் கழுத்தைத் திருகித் தெருவில் வீசிவிடலாமா என்பது போலிருக்கும். மறுநிமிடம் அது அமைதியாகி சாந்தசொரூபியைப் போல் பார்க்கும். அப்போது "பாப்பா உன்னெப் போயி இப்படி நெனச்சிட்டேனே", என்று உருகுவாள். கிளிக்கும் அவளது கோபமும். மகிழ்ச்சியும், கவலையும் தெரியும்.

சோர்ந்து இருக்கும் போது பக்கத்தில் வந்து அவள் கழுத்தில் அமர்ந்தபடி காதில் சொரசொரப்பு நாக்கால் தடவியும் அலகால் தேய்த்தும் கிசுகிசுப்பூட்டும். சில பொழுதுகளில் அது வயிற்றில் கழுத்தில்



# பெண்குழந்தை தாலாட்டு

கண்ணே என் கண்மணியே
கட்டழகே கருப்பழகி
பெண்ணே என் பெட்டகமே
பேசும் பொற்சித்திரமே
பூவரசம் பூவாட்டம்
பூத்திருக்கும் பூவரசி
நாவறண்டு நான் வாரென்
நாத்து நட்டு நடைநடந்து!
படிக்க சொல்லி உம் பாட்டன்
படிச்சி படிச்சி சொன்னான்டி
நடிச்சி நானழுது - இப்போ
நலங்கெட்டுப் போனேன்டி
என்னாட்டாம் இருக்காத
எழுத்துக் கூட்டி படிச்சிடுடி
நல்லா நீபடிச்சி
நாடாள வேணுமடி
மன்னாண்டு சேவைசெஞ்சு
மதராசி பேரு வாங்கு!
அடிமையா இருக்காத
அடங்கி கிடக்காத
துடிப்போடு நீ ஓடு
துமிக்கியென நீ பாயு
ஆணோடு சரிசமமா
அம்மா நீ நில்லு
பெண்ணென்று எப்போதும்
பின்வாங்கி போவாத
சின்னவளே தெரிஞ்சுக்கோடி
புத்தியோட நடந்துக்கோடி

**மு.பாலசுப்பிரமணியன்**
புதுச்சேரி

முதுகில் நின்றுகொண்டு ஒருமாதிரி நடக்கும். முதலில் ஒன்றும் தோன்றாத அவளுக்கு நாளாக நாளாக அவளின் கணவனைப் போல எண்ணத் தோன்றியது. அதிலிருந்து அது ஆண் கிளியாயிருக்கும் என்னு தோன்றியது. இப்போது பாப்பா என்று அழைக்கும் போது தவறாகவே படுகிறது.

இந்தப் பெயருக்கு பழகிவிட்டதால் வேறொரு பெயருக்கு ஒப்புக் கொள்ளாது தான். கிளி அவனைப் போலவே தன்காரியப்புலிதான். அவன் பசி தீர்ந்தவுடன் ஓடி விடுவதைப் போல பறந்துவிடும். பின் அதன் சேட்டை கம்பியில் வாயாலும் கவ்வி ஏறுவதும், அதன் சின்ன கம்பி ஊஞ்சலில் ஆடுவதும்தான். அப்போது அழைத்தாலும் வருவதற்கு முரண்டு பிடிக்கும். பெருமை பிடிபடாது முகத்தூவல்களை சிலிர்க்கச் செய்தபடி இருக்கும்.

ஏன் இதை போகும் போது வாங்கித் தந்துவிட்டு போனான்.? எண்ணிப் பார்ப்பாள். அதற்குள் ஆயிரம் விடைகள் இருக்கும். அவளைச் சிறைப் படுத்த. அம்மா வீட்டிற்கு அடிக்கடி போகாமல் தடுக்க, அவளது தனிமை எண்ணங்களை மறக்கடிக்க, துணைக்கு ஒன்றென எதுவும் இருக்கலாம். அவனுக்கான ஆசை என்பதுதான் உண்மையானது.

எப்போது ஈமெயில் அனுப்பினாலும் முதலில் கிளியைக் கேட்டு விடுவான். கர்ணா, தியாகா, மௌனா, பச்சாயி என பலபெயர்களால் அழைத்திருப்பான். பேசச் சொல்லிக் கொடு என்று வேறு உயிர் எடுக்கிறான். இதுவரை ஏன் பேச வைக்கவில்லை என்றும் பேசாவிட்டால் அதன் நாக்கில் வசம்பை அரைத்து மெதுவாக தடவி என்கிறான். தடவி ஒண்ணுலாட்ட ஒண்ணு ஆயிட்டுது என்றால் நான்தான் அவனுக்கு பதில் சொல்லணும். பச்சைப்பட்டு உடுத்தியவள் என்று ஒரே கவிதை ரகளை வேறு.

கிளி குறித்து அவன் இத்தனை கவலைப் படுவான் என்று அவள் எண்ணவில்லை. சிறுவயதில் இருந்தே அவனுக்கு கிளிக் கிறுக்கு. மொட்டைப்பனையில் ஏறி விழுந் திருக்கிறான். சிலசமயம் கிளி கொத்தி காயப் பட்டிருக்கிறான். அவனது கிளிபிடிக்கும் தீரக்கதைகளை அவன் சொல்லும் போது முகம் அவ்வளவு சிலிர்த்துக் கொள்ளும். இப்போதும் அப்படித்தான் சென்னையில் ஆயிரக்கணக்கான கிளிகளுக்கு உணவு கொடுக்கும் ஒரு வீடியோ அனுப்பியிருந்தான். அவள் அதைப் பார்த்தபோது கோபம் தலைக்கேறியது. எப்போதும் ஒரு கிளியை சுற்றி எப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளமுடியும். உண்மையிலேயே கிளி கூட அவள் மீது பாசமாக இருக்கிறது. அதற்காக அவளது தனிமைகள் இரவுகள் தூக்கமற்று நீண்டுதான் கிடக்கின்றன எப்போது அவன் உணர்வான்.

அதிகாலை சிறிது கண்ணுறக்கம் வரும் போது இருண்மை படர்ந்த கனவுகளும், கிளியின் கூக்குரலும் அவளைப் பயம் கொள்ளச் செய்து எழுப்பிவிடுகின்றன.

பனிபடர்ந்த வெற்றுவெளியில் யாரோ நிற்பது போலவும், அவள் கைகளாலே தன் இடுப்பில் இருக்கும் குழந்தையை தின்பது போலவும், அந்தக் குழந்தை தலையற்று தப்பித்து மணலில் ஓடுகிறது. தாய் பூதமாக மாறி பிடிக்க ஓடுகிறாள். முண்டக்குழந்தை சடக்கென பறவையாகி வானம் ஏகி வண்ணப்பறவையாகி மேகத்தில் கலந்து காணாமல் போய் விடுகிறது. அந்தப் பெண்பூதம் கருமையாகி காற்றில் கல்க்கிறது. வெளிச்சமற்றுப் போக அவள் வெளிச்சக்கீற்றை மேகா தேட ஆரம்பிக்கையில் கிளி கத்தி எழுப்பி விட்டது. நல்லவேளையாக அந்த இருட்டுக் கனவு அத்தோடு முடிந்த நிம்மதி அவளுக்கு இருந்தது. அந்தக் கனவுக்கு உச்சிப்பொழுது வரை பலன் தேடி எப்போதும் எப்போதும் போல கனவும் உதிர்ந்து போனது.

அவள் கணவன் செல்பேசியில் அழைக்கும் வரை கனவை ஞாபகத்தில் வைத்துக் கேட்டபோது அதைப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. இரவில் வெந்நீர் குடி அல்லது பகலில் தூங்காதே என்பது

தான் பதிலாய் இருக்கும்.

அவன் கவலையெல்லாம் கிளியின் றெக்கை வளர்ந்து விட்டால், வெட்டிவிடு என்பதாகத்தான்இருக்கும்.பின்னேஅவனிடம் அவள் கனவையோ பயத்தையோ சொல்லி என்ன பயன் என்று இப்போதெல்லாம் சொல்வதில்லை. சிலசமயம் அவளுக்கே தோன்றும் இவன் கிளியை சொல்கிறானா அல்லது தன்னைச் சொல்கிறானா என்று. இறக்கைகள் அவளுக்கு இருந்தால் அவன் பாடு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்ப்பாள். சில சமயம் அது சிரிக்கவும் பல சமயம் அழவும் தோன்றும்.

கிளி கூண்டிற்குள் கிடந்து கத்திக் கொண்டே இருந்தது. ''என்றைக்குத்தான் பேப்பரைப் படிக்க முடிந்தது'', என்று கருமிக் கொண்டே கூண்டைத் திறக்கப் போனாள்.

அவள் அதிகாலையில் வைத்த பழம் அப்படியே இருந்தது. ''ஏன் சாப்பிட வில்லை'', என்று கிளியிடம் கேட்டாள். அது கீ என்று மெதுவாகக் கத்திவிட்டு அமைதியாகியது. அது கோபத்தில் சாப்பிடாமல் இருப்பதை அறிந்து ''சாப்பிடு பாப்பா'', என்று கூண்டை இரண்டு தட்டு தட்டினாள்.

“நீ என்னைப் பார்க்காமல் எங்கோ போகிறாய்” என்பது போல கிளி கத்தியது. கிளியின் பேச்சு அவளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக விளங்கியது அதன் பசி, கோபம், அடம் அதன் விளைவாய் எழுப்பும் குரலும்,அதுதலையாட்டிபேசும்விதத்திலும் அதன் பேச்சுமொழி அறிந்திருந்தாள். கிளிக்கும் அது தெரியும். இப்போது மனிதனைப் போலவே அவள் சொல்லும் சொற்களை உச்சரிக்க துவங்கியிருந்தது. கிளியாக அவளும், அவளாக கிளியும் மாறிக் கொள்வதில் அவர்கள் காலத்தை மறந்திருந்தார்கள். கொஞ்ச நாளாக வெளி கிளிகளின் சத்தத்திற்கு பதில் கொடுக்க ஆரம்பித்திருந்தது. அதற்கெனவே சில கிளிகள் அவள் வீட்டின் புறவாசலில் நிற்கும்



சீமைக்கருவை மரத்திற்கு வருகின்றன.

ஒருவேளை கிளிக்கு தன் இனத்தோடு சேர்ந்து வாழ ஆசை வந்துவிட்டதோ என்று பயந்தாள். இறகு முளைத்தால் பறந்துவிடும்தானே. அவளுக்குள் யார் துணை என்ற அச்சம் பற்றியது. இறக்கைகளை மிகக் கவனமாக வெட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வாள்.

கிளியென்ன, அவளும் தன் இறக்கைகளை வெட்டிக் கொண்டுதானே வாழ்கிறாள். அவ்வப்போது எதிர்வீட்டுக்காரப் பெண்கள், பிள்ளைகள் வெளியே போகிற போதெல்லாம் அவள் இறக்கைகள் வெட்டப் பட்டுவிட்டதாக உணர்ந்தாள். ஒரு பெரிய கூண்டில் அவளும், சின்னக் கூண்டில் கிளியுமாக வாழ்வதாகப் பட்டது. அவன் பேசுகிற போதெல்லாம் வெளிநாட்டில் கஷ்டப்படுவதையும், இப்போது சரியாக சம்பளம் கூடக் கொடுப்பதில்லை என்றுதான் பேசுகிறான். ஊருக்கு வாங்க இங்க ஏதாவது தொழில் செஞ்சு பிழைச்சிக்கிடலாம் என்று கெஞ்சும் போது அதை மறுதலித்து விடுகிறான். இப்போது இந்தியாவில் தொழில் செய்யும் நிலைமை இல்லையாம். அவள் தன்னைப் பற்றி பேச ஆரம்பிக்கும் சமயத்தில் அவனுக்கு வேறு வேலையோ, அழைப்போ வந்து விடுகிறது.

பலசமயங்களில் கிளி வைக்கும் பழங்கள் இரைகளையெல்லாம் குரந்து குரந்து போட்டு விடும். கிளியின் குணமே அப்படியானது என்பதை சுப்புப்பாட்டி சொன்ன பிறகுதான் அறிந்தாள்.

சுப்புப்பாட்டிக்கு அவளால் பதில் சொல்ல முடிவதே இல்லை. வெகு நுட்பமாக அவளது சிறுவயது, மன, உடல் ஆசைகள் பற்றியும், தனிமையின் நீட்சி என்பன குறித்து முன்வைக்கும் கேள்விகளை சிரித்துக் கொண்டே தவிர்ப்பாள். சுப்புப் பாட்டி நீள வெள்ளை முடிகளை ஒருபுறமாய் தள்ளி விட்டுக் கொண்டு பேசுவதை ரசிப்பாள்.

“மேகா, நீ பெரீய்யய ஆளுதாம்டே”, என்று சொல்லியபடியே சிரித்தபடி போவாள். பாட்டி போன பிறகு மன அதிர்வுகள் அருவிபோல பெருகி உயரத்தில் இருந்து குதிக்க ஆரம்பித்துவிடும். அவள் அமைதியை கிளி பார்த்துவிட்டு சத்தமிடும். கூண்டை திறக்கும் வரை கத்தும்.

“பாப்பா பொறுடா முத்தத்தில் காய வைத்திருக்கும் பருப்பை எடுத்து வச்சிட்டு

## கவிதை பிரம்மன் பாரதியே!

**சாதிகள் உள்ளதே பாரதி – இன்னமும்**
**சாதிகள் உள்ளதே பாரதி**
**காதல் செய்தும் ஒழியவில்லை சாதி**
**காதலுக்கு நடக்குது சாதியால் அநீதி**
**காதலுக்கு எதிராய்**
**பறக்குது சாதிக் கொடி**
**சாதி மாறிய காதலுக்கு**
**மரணம்தான் சவுக்கடி**
**சாதிவெறி ஏற்றுகிறார்**
**மாணவர் உள்ளத்தில்**
**பாதை மாறிய சிறார்கள்**
**சீர்திருத்த இல்லத்தில்**
**இளையோர் வலிமை**
**கொலை செயல் புரிவதற்கோ**
**களையெடுக்க நாற்றுக்கள்**
**அரிவாள் ஆவதோ?**
**கொலைக்குச் சாதிஎன்ன**
**அனுமதி அட்டையா?**
**தாய் கொடுத்த உயிர் என்ன**
**இலவசத்தின் உச்சமா**
**மலை உயர் சிலை எல்லாம்**
**நாட்டின் சிறப்பாமோ**
**சிலை எல்லாம் உயிர் பெற்றால்**
**சாதி வாய் மூடுமோ**
**இலவசமாய் உயிர் கொடுக்க**
**அழைக்கின்றேன்**
**கவிதை பிரம்மன் பாரதி வருவானோ**
**வைக்கம் வீரனை**
**உயிர்ப்பித்துத் தருவானோ?**



மேகலா செழியன்
புதுச்சேரி.

வாறேன்'', என்றால் வரும் வரை அமைதியாக இருக்கும். அதன்பின்பும் அதே நிலை நீடித்தால் கத்தி கலவரப்படுத்திவிடும்.

திறந்துவிட்ட அடுத்த நொடியில் அவளைச் சுற்றிச் சுற்றிப் பறக்கும். அவளுக்கும் ஒரு ஆறுதலாய் இருக்கும். பின்பு அவளை தலை சாய்த்து காதலாய்ப் பார்க்கும். அவளுக்கு அவளது தனிமை சோகம் வடிந்து சாதரணமாய் மாறி விடுவாள்.

எப்போதாவது வரும் மாமனார் இப்போது அதிகம் வருவதில்லை. அவருக்கு கிளியைப் பிடிப்பதில்லை. தன் மகனைத் திட்டிவிட்டு கிளியின் இறக்கையை வெட்டாமல் பறக்க விட்டுவிடு என்பார். கிளி வளர்த்தால் குடும்பதுக்கு ஆவாது என்று குடும்பக்கதை சொல்ல ஆரம்பித்து விடுவார். அவரது தங்கை வீட்டில் பெண் பிள்ளைகள் தங்காததற்கு காரணம் கிளி வளர்த்துதான் என்பார். அவர் வந்து விட்டால் கிளி சத்தம் போடாது அமைதி ஆகிவிடும். அவர் எப்போது போவார் கிளி எண்ணிக் கொண்டிருக்கும். அவளுக்கும் பின்னால் அப்படி தோன்ற ஆரம்பித்துவிட்டது. அவரும் அடிக்கடி வருவதை நிறுத்திக் கொண்டுவிட்டார்.

அவள் நாளிதழை வீட்டிற்குள் கொண்டு வந்து ஹால் தரையில் விரித்தாள். ஒன்றிரண்டு செய்திகளை வாசிக்கும் முன்னே கிளி அவள் முன் வந்து நின்றது. ஏதாவது கொறிக்க வேண்டும் என்று கத்தியது. அவள் மீண்டும் தலைகுனிந்து படித்தாள்.

கிளி அவள் கழுத்தில் அமர்ந்து காதை அலகால் கவ்வ ஆரம்பித்தது. கணவனின் கவ்வுதல் போல பிடித்திருப்பதாகத் தோணியது அவளுக்கு. கிளி மீண்டும் பறந்து அவள் தோளில் சரிந்து நின்றது. கிளியின் முன்பின் பாதங்கள் அவள் ஜாக்கெட்டைப் பற்றியிருந்தன.

அவள் தலை நிமிராது படித்தாள். கிளி இன்னும் பத்து நிமிடம்தான் சும்மா இருக்கும் என்று தெரியும்.

'''பாப்பாசும்மாஇரி'',பேப்பர்பாத்துட்டு வாரேன் என்றாள் கிளி மாட்டேன் என்று கத்தியது. ''வம்பு பண்ணாதே அடி விழும்'' என்ற போது அது 'அடிங்க அடிங்க' என்று கத்த ஆரம்பித்தது.

அவள் பேப்பரை மடித்துவிட்டு கிளியை கையில் ஏந்தினாள். வீட்டிற்குள் செல்பேசி ஒலிக்க ஆரம்பித்தது. கிளியோடு ஓடினாள். அவள் கணவன் உதயகுமாரின் அழைப்புதான். ''வர ஏற்பாடு செய்து விட்டீரகளா. விசா ரெடியாகி விட்டதா'', என்று கேட்க எண்ணிக் கொண்டாள்.

அவன் விசா பற்றி எந்தப் பதிலும் சொல்லவில்லை. மாறாக பதவிஉயர்வு ஒன்று வருவதாகவும் இன்னும் ஆறுமாதம் அவசியம் இருக்கணும் என்றான். அவள் பேச்சை சுருக்கிய வேளையில் ''மேகா கிளி பேச ஆரம்பித்துவிட்டதா, என்னவெல்லாம் பேசுகிறது'',, என்றான்.

மேகா சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு சொன்னாள். ''கிளி நன்றாகப் பேசுகிறது. நாம் சொல்லும் வார்த்தைகளுக்கு எதிர்மறையாய் பதில் சொல்கிறது''.

''அய்யோ நான் வந்து கிளியோடு பேசணுமே'', என்றான். கிளி ஏணிப்படியில் அமைதியாக அமர்ந்திருந்தது. ''உன்னோடு பேசணுமாம் பாப்பா'',, என்றாள் அவள்.

அவளைப் போலவே கிளியும் அவனுடன் பேச்சை நீடிக்க விரும்பாமல் மேல்படியேறி மாடிக்குள் மறைந்து கொண்டது.

வெளிக்காற்றால் கிளிக்கூண்டு ஊஞ்சலைப் போன்று வேகமாக ஆடியது. மேகா கூர்ந்து பார்க்கையில் அந்த வீடும் சேர்ந்து குலுங்கியது.

இதயம் சட்டென பிழிய வலி பெருகி உடல் நடுங்கியது. வீடு இடிந்து விழுவதற்கு முன்னே கிளியோடு போய் தெருவில் நிற்க வேண்டும் என்று தோன்றியது.

■



– கார்த்திக் கல்யாணி

# பெண்மையும், உண்மையும்!

முப்பத்து ஐந்து வருட அலுவலக வாழ்க்கை முடிய போகிறது. ஓய்வு பெற ஓரிரு தினங்களே உள்ளது!

அன்றாடம் வேலை, வீடு என்று பழகி விட்ட நான்,உடலையும் உள்ளத்தையும் இனி கடிவாளம் கட்டி வேறு பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்!

அலுவலகத்தின் முதல் படியில் இருந்து, மூன்றாவது மாடிவரை என் கால் பட்ட அத்தனை இடமும் கூடி நின்று கீதம் பாடியது; ஏக்கமான எண்ண அலைகள் எங்கெங்கோ இழுத்து செல்கிறது!

அன்று முதன் முதலாக அலுவலகம் சென்றவனை, அலங்கார தேரொன்று வலம் வந்து அனைவரையும் எனக்கு அறிமுகம் செய்தது!

பதினெட்டு வயது பல்லக்கு, என் இதயத்தில் ஏறிக் கொண்டு தன் பெயரை சொல்லாமல், அனைவரும் சேச்சி என்று அழைப்பார்கள், நீயும் அப்படி அழைக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்றாள்!

சேட்டன் என்று அழைத்து, என்னை சில்மிஷம் செய்கிறாளா? அண்ணன் என்று கூடவா அழைப்பார்கள்!

என்ன நினைத்தாலோ, அடுத்த சில நாட்களில் அம்மான் என்று விழிக்கத் துவங்கினாள்!

அதையும் தாண்டிய வருடங்களில், திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்கு தந்தை என்றான பின்; என்னை அச்சன் என்றாள்; அது என்ன கன்றாவியோ; தமிழை தாண்டி நமக்கு ஒன்றும் தெரியாது!

இன்று அச்சச்சன் என்றாள், என்ன உளறுகிறாய் என்றேன்; தாத்தா என்று அர்த்தம் என சலங்கை ஒலியாய் கல, கலத்தாள், அண்ணா என்ற போதும், அம்மான் என்ற போதும், அப்பா என்ற போதும் அது கல்யாணியா, காம்போதியா? இல்லை, இல்லவே இல்லை; முராரி! ஏதோ ஒரு வகையில் உறவை தேடுகிறாள் பேதை!

என்னை போலவே; அவளுக்கும் வயதான தாய், தந்தையை காப்பாற்ற வேண்டிய நிலை!

நாற்பது வயதில் எனக்கு இருபது வயது பெண்ணைக் கூட தர தயாராக இருந்த உலகில், அவளுக்கு அறுபது வயது கிழவன் கூட தாலி கட்ட முன் வரவில்லை!

சேச்சியோடு அவள் வாழ்க்கையின் போக்கு பற்றி பேசினேன், இந்த அக்கறை உன்னை அம்மான் என அழைத்தேனே அப்போதே ஏன் இல்லாமல் போனது? என்றாள் வருத்தம் கலந்த குரலில்!!

இனமும், சேச்சியின் குணமும் பிடித்திருந்தும், என் இதயத்தின் ஏக்கத்தை பணம் மறைத்த கதையை சொல்லவா? நான் இப்போது பிணம் என்பதை சொல்லவா? எதை சொல்வேன்; எப்படி சொல்வேன் சேச்சி உன்னிடம்!

# தொலைத்த சொர்க்கம்

**– கீர்த்தனா**

இந்த மூதாட்டி விரும்பாத உலகத்தை தான் இன்று நாம் அனைவரும் விரும்புகிறோம்...


கிராமத்தில் வளர்ந்த சிறுவன் இன்று நகரத்தில் வாழ்கிறான். மாதம் ஒருமுறை வளர்த்தவளை பார்க்க வரும் அவன் மூதாட்டியிடம் வந்து "எப்படி தான் இந்த வீட்டில் இருக்கிறாய்' என்கிறான்.

கிழவியோ "அட கிறுக்கு பைய மவனே இங்க தானா டா வளர்ந்த படிச்சா இப்போ என்ன டா இப்படி சொல்லுற" என்று கேட்கும் அந்த கிழவியின் வாயை மூடச் சொல்கிறான்...

ஊருக்கு கிளம்புகிறான் அடுத்த வாரம் கிழவி இறந்து விடுகிறாள்... திடீரென்று அவனும் திருமணமும் செய்து கொள்கிறான். குழந்தையும் பிறக்கிறது. கேள்விகள் கேட்க தயாராகி வளர்கிறது.

நகர வாழ்க்கையை பற்றி சொல்லி தரும் தகப்பன் அவன் வாழ்ந்த கிராம வாழ்க்கையும் கிழவி பற்றியும் சொல்வதற்கு தயங்குகிறான் வெட்கப்படுவதுடன் கௌரவ குறைச்சலாக எண்ணுகிறான்...

ஆண்டு விடுமுறையை கழிக்க அம்மாவின் ஊருக்கு செல்ல தயாராகுகிறான். மனைவியின் ஊரோ கிராமத்து வாழ்வியலை சார்ந்தது...



குழந்தையோ பிடித்து வைக்க ஆள் இல்லாமல் பத்துக்கு பத்து கட்டிட வாழ்க்கையிலிருந்து விலகி பறந்து விரிந்த வானத்தின் நடுவே ஒரு மலையின் அடிவாரத்தில் அமைந்த கிராமத்தின் மண் வாசனையை அச்சிறுவனால் உணர முடிகிறது. அவனால் காக்கைகளின் அழகை ரசிக்க முடிகிறது. குயிலின் ஒலியை இசைக்க முடிகிறது.

தூரமாக விளையாடும் குழந்தைகளின் விளையாட்டை அவனால் வியப்பாக பார்க்க மட்டுமே முடிகின்றது... அதை பற்றி தெரிந்திருக்க முடியவில்லையென்று கவலை அச்சிறுவனின் இயல்பிலே அறிய முடிகின்றது...

அப்பாவிடம் சென்று கேள்விகளை எழுப்புகிறான். கிட்டிப்புள், கோலி, ஊது முத்து, பம்பரம், குதிரைக்கல்லு, கோழிக்கால், பச்சைக் குதிரை, பொய்க்கால் நடை, கொட்டாங் குச்சி நடை, நொண்டி, பல்லாங்குழி,கல்லா மண்ணா, கண்ணாமூச்சி, லாக் அண்ட் கீ இவையெல்லாம் என்னவென்று மூச்சு விட நேரம் கொடுக்காது கேட்கிறான் அச்சிறுவன்.

இதில் ஒன்றை நாம் அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டும். மூச்சு விடமால் மனப்பாடம் செய்யப் பழகிக் கொள்கிறான். இது தான் இன்றைய கல்விமுறை. புரிந்து படிக்கும் தன்மையை ஒரு குழந்தையிடம் நாம் தானே அழிக்கின்றோம் அதுவாகவே இல்லை என்பதை உணர வேண்டும்..

சரி கதைக்கு வருவோம். இத்தனை கேள்விக்கும் பதில் ஒருவரியிலென்று சிறுவன் எதிர்பார்த்து இருக்க மாட்டான் தன் அப்பாவிடமிருந்து... "இதெல்லாம் கிராமத்து விளையாட்டு" என்று..

இது தான் இன்றைய உலக நடப்பு... விளையாட்டுக்களிலே கிராமம் நகரம் என்ற பாகுபாடு பெற்றோர்களிடம் இருப்பின் குழந்தைகளிடம் எதிர்ப்பார்ப்பது எந்தவிதத்திலும் சரியாக இருக்காது. ■

# படிமம் என்றால் என்ன?

சிலர் படிமம் படிமம் என்கிறார்களே அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

படிமம் என்பது, தற்சமயம் கண்முன் இல்லாத ஒரு காட்சியை, எழுதப்பட்ட சில வாசகங்களின் ஊடாகக் கண்டு ரசிப்பதாகும்.

அதாவது; நாம் ஒரு புகைப்படத்தை ஒருவரின் கைகளில் வைத்து அதைப் பார்க்கும்படி சொல்வது போல எழுதப்பட்ட ஒரு கவிதையைக் கொடுத்து அதிலுள்ள காட்சியை கண்களால் காணச் செய்வதாகும்.

இதை இன்னும் விரிவாகச் சொல்வ தென்றால் ஹைக்கூக்களில் மனிதர் அல்லது மனிதரல்லாவற்றின் உணர்வுகளைக் குறிப்பிடாமல் அவர்களின் அல்லது அவற்றின் செயல் நடவடிக்கைகளைக் கண்முன் கொண்டுவந்து காட்டுவதேயாம்.

உதாரணமாக

மனம் வருந்தும் கொக்கு
அல்லது
மனம் வருந்தும் விவசாயி

இங்கு கொக்கின் அல்லது விவசாயியின் உணர்வொன்றைச் சொல்லப்படுகிறது.

இது படிமம் அல்ல.

வருந்துதல் என்ற உணர்வை காட்சிக்குள் கொண்டுவர முடியுமா? முடியாது. கொக்கின் அல்லது விவசாயியின் மனதை நாம் காண முடியுமா? முடியாது.

ஆனால்

வெயிலில் வாடும் கொக்கு

எனும் வாசகத்தில் கொக்கின் ஒரு செயல் நடவடிக்கையைச் சொல்லப்படுகிறது.

இதை வாசித்தவுடன்

அடிக்கும் வெயிலும் நீண்ட நேரம் இரை தேடிக் களைத்து, எதுவும் கிடைக்காததால் பசியால் வாடி வதங்கி நிற்கும் கொக்கு நம் கண்முன் வந்து நிற்கும்.

இதே போலத்தான் வெயிலில் வாடும் விவசாயி என்று வந்தாலும் அதற்குரிய காட்சி கண்முன் வரும்.

இதுதாங்க படிமம்!

இதை ஏற்கனவே நீங்கள் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள்.

இருந்தாலும் அதையும் என்னவென்று அறிந்து ஹைக்கூக்களில் உணர்வுகளுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்தைக் குறைத்து, படிம உத்திகளைக் கூடுதலாகக் கையாண்டு எழுதினால் உங்கள் ஹைக்கூக் கள் நின்று பேசப்படும்.

**சத்தார் எம். அஸாத்**

உனக்குள்
என்னை புதைத்த பின்
உனக்கென்று தனி வலிகள் ஏது!!!

# யாழிசைப் படமனை

- நூல் விமர்சனம்

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி
புதுச்சேரி.

செந்தமிழினியன் அவர்களின் உன்னதமான நாவல் யாழிசைப் படமனை. தன் நூலை ஸ்டெர்லைட் ஆலையில் உயிர் நீத்த ஈகியர்களுக்குச் சமர்பணம் செய்திருப்பது கூடுதல் சிறப்பு. தனது முன்னுரையில் «தீட்டின் எச்சம் « தலைப்பில், பெண்களைத் தெய்வமாக வழிபடும் இந்நாட்டில் தான் சிறுமிகள், பெண்கள் என்ற வயதுவித்தியாசமின்றி பாலியல் வன்கொடுமைகளுக்கு பலியாகிறார்கள். பெண் தீட்டு என்றால், அவளிடமிருந்து வந்த ஒவ்வொரு ஆணும் வீட்டின் எச்சங்கள் தானே என்கின்றார் .

இவருடைய நாவல் மொத்தம் 203 பக்கங்களில், 15 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. படமனை என்பது அவருடைய போட்டோ ஸ்டுடியோ. இந்த நாவலைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், ஒரு போட்டோ காரனின் வலி நிறைந்த அனுபவம் நாவலாக படர்ந்திருக்கிறது எனச் சொல்லலாம் .




இந்நாவலின் கதாநாயகன் சிதம்பரம். பனை மரத்தில் பாதி இருப்பான். ஒல்லியான தேகம். நீண்ட கழுத்து. எந்த கெட்ட பழக்கமும் பழக்கமும் இல்லாத பரிசுத்த ஆவி. தன் தந்தை இறந்த பிறகு தன் குடும்பத்தைச் சுமந்தவன். இப்படித்தான் தொடங்கியிருப்பார் நாவலை. அரசாங்கக் கடைநிலை ஊழியனான இவனுக்கு குடும்பம் நடத்துவதில் பற்றாக்குறை. இருப்பினும் அது பற்றி வருத்தப்படாத உள்ளம். எல்லாம் கடந்து போகும் என்ற உயிரியல் தத்துவத்தை அறிந்த ஞானியாக விளங்கினான்.

இவனுடைய நண்பர்கள் மதுரை, பழனி ,தனுஷ்கோடி. எல்லாம் ஊரின் பெயர்கள் . அவருடைய இரண்டாம் மனைவி பெயரும் ஊரின் பெயரே. அதாவது கன்னியாகுமரி. இந்நாவலின் கதாநாயகன் பெயரும் ஊரின் பெயரே சிதம்பரம். இந்நாவலில் இடப்பெயர்களும் நிகழ்வுகளிலும் பாத்திரங்களிலும் அதிகமாக ஊர் பெயரைப் பயன்படுத்தியிருப்பது சிறப்பு. ஊர்மரபுப் பெயர்களைக் காக்க வேண்டுமல்லவா!

சிதம்பரம் தன் அம்மாவின் மீது மிகுந்த பற்று கொண்டவனாக இருக்கிறான். தன் மனைவியை இழந்து 15 வருடமாக, தன் இரு மகன்களை தன் அம்மாவின் துணையோடு வளர்த்து வருகின்றான். அவன் ஓர் அரசாங்க வேலையில் இருந்தாலும் அந்த வருமானம் போதாமையால் குடும்பத்தை நடத்த கஷ்டப்பட வேண்டியுள்ளது. ஆகவே தன் நண்பன் மதுரையின் ஆலோசனைப்படி யாழிசை படமனை ஆரம்பித்தான். சரியான ஊர் சுற்றியாக இருந்தான். ஆனால் அவன் வாழ்க்கையில் எந்த பிடிப்பும் கிடையாது மற்றவர்களுக்குப் பிரச்சனையென்றால் ஓடோடி உதவக் கூடியவன். எந்தத் துன்பத்தையும் பிரமாதமாக நினைத்துக் கொண்டது கிடையாது அதுபோல எந்த இன்பத்தையும். தன்னோடு இருந்த அம்மா பலநாள் நோயுற்று இருந்த பொழுது அவளுக்குப் பார்த்துப் பார்த்துப் பணிவிடை செய்கிறான். பீ மூத்திரம் யாவற்றையும் சகித்துக்கொண்டு தன் அம்மாவை தினமும் சுத்தப்படுத்துவான். ஒருநாள் அந்த மகனிடம் அழுகிறாள் தாய். ‘‘மகனே இந்த இரண்டு குழந்தைகளை

பார்ப்பதற்காகவாவது திருமணம் செய்து கொள்'' என்கிறார் வேண்டாம் என்று மறுக்கிறான். அவனுக்கு ஊழியம் செய்த தாயும் இறந்து விடுகின்றார். அக்கம் பக்கத்தில் இருப்பவர் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறார்கள். தன் நண்பனிடமும் மகன்களிடமும் ஆலோசனை செய்த பிறகே இவனும் செய்து கொள்கின்றான். அதனால் பெரிய இன்ப துன்பத்தை அனுபவித்து விடவில்லை .

நாவலின் வடிவம் என்பது நேராக ஒரு முடிவை நோக்கி செல்ல வேண்டும். அந்த வகையில் இந்த நாவல் ஒரே நேர்க்கோட்டில் காலங்களை கைப்பிடித்து செல்கிறது செல்கிறது. ஒரு நாவலின் முடிவு என்பது யூகிக்க முடியாத திருப்பமாக அமைய வேண்டும். அதுதான் அந்த நாவலின் வெற்றி ஆக இருக்க முடியும். ஒரு சிறந்த கதை என்பதும் அதன் கடைசி வரி, ''வாசகனின் மனதில் மீண்டும் தொடங்க வேண்டும்'' என்பதே அப்படித்தான் இந்த நாவல் கடைசி வரி இருக்கிறது .

''சொல்லுங்க உங்களுக்கு யார் வேணும் ''

''யாழிசை படமனையா''

''மன்னிக்கணும் அதை மூடி ஒரு மாசம் ஆச்சு''

போன் துண்டிக்கப்படுகிறது. அவ்வளவு தான் கதை முடிகிறது. எதிரில் பேசுபவர்கள் குரலை கேட்கும் சந்தர்ப்பமின்றி, வியாக்கியானம் ஏதும் செய்யாமல் முடித்துவிடுகிறார். அத்தனை வலிகளை அப்படமனை அனுபவம் அவனுக்கு வழங்கியிருக்கிறது. தரித்திரம் புடிச்ச தலைமுழுக போனாலும் ஏகாதசி வந்து எதிரில் வந்து நின்றான் இந்தத் தத்துவத்திற்கு உரியவனாக சிதம்பரம் இருக்கிறான் கதை நிகழ்வுகள் என்று எடுத்துக்கொண்டால் அவர் அறிமுகப்படுத்துகின்ற எல்லா இடங்களும் கட்டணம் இல்லாமல் பேருந்தில் பயணம் செய்து நேரடியாக ஊர்களைச் சுற்றிப் பார்க்கின்ற அனுபவத்தை இந்த நாவல் தருகிறது. லாஸ்பேட்டை ரோடு, பெரியாஸ்பத்திரி திருக்கனூர், பாண்டி, சுப்ராயலு கல்யாண மண்டபம் கடலூர், ஆகிய ஊர்கள் எல்லாம் அந்த இடத்தை குறித்த வர்ணனை என்பது மிகத் தெளிவாக இருக்கிறது .

இதில் வருகின்ற கதாபாத்திரங்கள் நாம் தினமும் அடிக்கடி சந்திக்கிற பழகுகின்ற நெருக்கமான ஆட்களாகவே தெரிகின்றனர். தூய தமிழில் எழுதினாலும் சில இடங்களில் தவிர்க்கமுடியாமல் expose இன் டெவலப்மென்ட் என்ற ஆங்கில வார்த்தைகளை சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நாவலின் முக்கிய கதாபாத்திரம் சிதம்பரம் பற்றி அவருடைய நண்பர் சொல்லுவார்.

''சிதம்பரம் உங்களுக்கு கொஞ்சம்

## பெருங்கடலில் ஓடும் மௌன மொழி.!!!

மௌனப் புன்னகை
கொட்டிய
உந்தன் வதனத்திலிருந்து
ததும்பி ஓடும்
அன்பின் வாசனையை
அள்ளிக் குடிக்கிறேன்...

அது
நீண்ட சஞ்சரிப்போடு
எந்தன் கரங்களில் நசிபட்டு
என்னைத் தாண்டி
நெடுதூரம் ஓடியது
ஆனந்தச் சாயல்கள்...

விரித்துப் பார்க்கையில்
கொம்புகள் தள்ளி
மடிந்து போன
கனவுகளைச் சேர்த்து
புதுப்பாடம் புகட்டியது
நீதான் எந்தன்
நிழற் படமென.!!!

**கவிதாயினி லீஸா**

மனத்திடம் அதிகம். கண்டிப்பா ஒருநாள் ஜெயிப்பீங்க'' என்று சொல்லுவார். ஆனால் வாழ்க்கையில் சாதிக்க முடியாமல் வித்தியாசங்களை மட்டும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு ஒரு மாமனிதனின் கதையாக இது அமைந்திருக்கிறது. கதையின் சித்தரிப்பு என்று சொன்னால் அகச்சித்தரிப்பு, புறச் சித்தரிப்பு என இருவகைப்படும். இவர் பெரும்பாலும் புறச்சித்தரிப்பு கதையைக் கொண்டு போயிருக்கிறார். கதைமாந்தர் உரையாடல் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பொது மொழியில் கதையைச் சொன்னாலும் புதுச்சேரி மக்கள் வட்டார மொழி நடையை பயன்படுத்தி இந்த கதையை நிகழ்த்துகின்றார். சிதம்பரத்தின் முகம் எப்படி பட்டது பட்டது? எப்படி பட்டது பட்டது என்றால், நம்மில் எல்லாருக்கும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு முகம் இருக்கும் உறவுகளிலும் நண்பர்களிடத்திலும் அலுவல கத்திலும் வேறு வேறு மாதிரியான முகம் மாதிரியான முகம் முகம் காட்டுபவர்களாக இருக்கிறோம். ஆனால் சிதம்பரம் எவ்விடத்தும் ஒரே முகத்தை கொண்டுள்ளார். அந்த முகம் நேர்மையான, எளிமையான, ஆர்ப்பாட்டமில்லாத ஒருமுகமாக திகழ்கிறது. இவர் யாழிசைப்படமனையால், தொழிலில் சில நஷ்டங்கள்ஏற்பட்டாலும்அதனால்மிகப்பெரிய மனபாதிப்பை அடைந்துவிடவில்லை. தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பதை நன்கு புரிந்து கொண்டவர். “யார்மீதும் கோபம் இல்லை, எதன் மீதும் வருத்தமில்லை” என்ற கோட்பாடு இவருடையது. இவருடைய இந்த நாவல் அவரின் நீண்ட கால கால நீண்ட கால கால பெருமுயற்சியால் உருவானது. இந்த அற்புத படைப்பை தமிழ் உலகம் உலகம் உலகம் போற்றி பாதுகாத்திட வேண்டும்.

நூல் : யாழிசைப் படமனை
ஆசிரியர் : செந்தமிழினியன்
பக்கங்கள் : 203
விலை : 200 இந்திய ரூபாய்
தொடர்புகளுக்கு : 9894943494



# புகுந்த வீடு

செழிச்சு வளந்தநல்ல நாத்தும்
பிறந்த வீடு போலத்தான்.

படுங்கி நட்ட நல்ல நாத்தும்
புகுந்த வீடு ஆகுமே!

பதரு இல்லா கதிரு போல
பரன் பரையுமே செழிக்கவே!

நல்ல மண்ணு போல
புகுந்த வீடும் வேணுமே!

**ஜெயாபாட்டி**

# நினைவில் ஓர் பயணம்

**நினைவில் ஒரு பயணம்**
**நினைத்திட உள்ளம் இனிக்கும்**
**மனதில் எந்நாளும் உன்நினைவு**
**மகிழ்வினைத் தந்து நகரும்**

**கற்பனையில் இரசித்திடும் உள்ளம்**
**கவலையை மறக்கச் செய்திடும்**
**பற்பல எண்ணங்கள் மனதில்**
**பாசத்தை மலரச் செய்யும்**

**வியத்தகு உலகில் எண்ணம்**
**விடியலைக் காணத் துடிக்கும்**
**தயக்கத்தை மறந்து நானும்**
**தடைகளை உடைத்து வருவேன்**

**நிர்மலா சிவராசசிங்கம்**

# எழுத்தாளன் என்றுமே இறப்பதில்லை.

எழுத்தாளர் பிரபஞ்சனை தமுஎகச தான் எனக்கு முதலில் அறிமுகப்படுத்தியது. அதுவரை அவரைப் பற்றி எதுவும் அறியாதவனாக இருந்தேன்.

கோவையில் தமுஎகசவின் இலக்கிய பயிற்சி பட்டறையில் சிறுகதையை எழுதுவது குறித்து அவர் பேசினார். அவரிடம் பேச அன்று எனக்கு தெரிந்தது அவருடைய நாவல் மட்டுமே. நண்பர்கள் ஹேலி கார்த்தியும் சுகந்திரனும் நானும் அவருடன் பேசலாம் என்று அவரிடம் சென்றோம். சிகரெட் புகைத்துக்கொண்டு தனியே நின்றிருந்த அவரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டோம். இளைஞர்கள் சின்னவர்கள் எதுவும் தெரியாதவர்கள் என்று ஒதுங்காமல் வெகு இயல்பாக பேசினார். பேச்சில் அவர் இளைஞராக தெரிந்தார். டூப்லெக்ஸ் பற்றியும் அவரது மனைவியின் அரசியல் செயல்பாடு பற்றியம் பேச்சு வந்தது. மிக மிக அழகிய முகம் டூப்லக்ஸ்சின் மனைவிக்கு என்று கூறினேன். அவர் ஆமாம் என்றார். சிரித்த முகத்தோடும் புகையும் சிகரெட்டும் சூழலுக்கு கறுத்த கண்ணாடியும் முழங்கைவரை தூக்கிவிட்ட ஜிப்பாவும் செதுக்கிய மீசையும் எனஜம்மென்ற அவரின் தோற்றம் எனக்கு எழுத்தாளன் என்பவன் எவ்வளவு கம்பீரமானவன் என்று உணர்த்தியது. சமூகத்தின் பகுதியாக நம்மை நாம் அறிந்தாலும் நமக்கான தனித்துவம் வேண்டுமல்லவா... அதை அவரிடமும் அன்று கற்றேன்.

அந்த பயிற்சி பட்டறையின்போது அவர் எங்களுக்கு அழகாக ஒரு கதை சொன்னார். ரஷ்ய புரட்சி வெடிப்பதற்கு உறுதுணையாயிருந்த சிறுகதைகளில் ‘தேசத்தின் முகம்’ என்ற சிறுகதையும் ஒன்று. அதை அவர் சொல்ல கேட்டதுதான் மிக இனிப்பானது. அதை படித்திருந்தால்கூட இவ்வளவு பிடித்திருக்குமா என்று தெரியாது.

இறுதியில் சொன்னார் ”எழுதினால்தான் எழுத்து. ஆக இளைஞர்கள் எழுதுங்கள். அதற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்,” என்றார்.

அவருடைய மாணவனாக நான் என்னை அறிந்துக்கொண்டேன். அதன் பிறகுதான் என் எழுத்தில் ஆழம் பதிய தொடங்கியது.

ஆண்டுகள் இரண்டு கடந்தன. எனக்குள் ஒரு போதாமை எண்ணம் வந்திருந்தது. நான் எழுதுகிறேன் என்பதில் எனக்கு போதாமை இருந்தது. எழுத்து என்னிடமிருந்து வெளிப் படுவது குறைந்துவிட்டதாய் எண்ணினேன்.


அப்போதுதான் பாண்டிச்சேரி இளைஞர் விடுதியில் நடந்த பயிற்சி பட்டறையில் கலந்துகொள்ள வாய்ப்பு கிட்டியது. அவரையும் சந்திக்க முடிந்தது. அன்று அவருடன் எழுத்து வெளிப்பாடு குறித்து பேசினேன். என் போதாமையை அவரிடம் சொன்னேன். இயல்பாக கேட்டுக்கொண்ட அவர் எனக்கு கூறினார்.

“எழுத்து தேவைப்படும் போது தானே வெளிவரும். எழுத்தாளன் அதை எழுத்துரு வில் வடித்து வைக்கிறான். அதை கட்டி இழுக்க முடியாது. ஆனால் எழுத்தின் தேவை என்பது, அதோ, (அருகிலேயே கடல்) அந்த கடலின் அலையும் கரையும் போல, வந்துக்கொண்டே இருக்கும். எழுத்தின் வெளிப்பாடு இப்படிதான்.’’ இவ்வாறு எளிமையாக கூறினார். அதுவரை ‘அடடா, நான் இப்போதெல்லாம் எழுதுவதில்லையே..’ என்ற அந்த எண்ணம் எனக்குள்ளிருந்து நீங்கியது.

என் எழுத்து பயணம் வளர உதவிய ஆசான் பிரபஞ்சன் அவர்கள்.

கார்த்தி டாவின்சி

# கண்ணீரஞ்சலி



எழுத்துலக நல்லறிஞர் எழுத்து மன்னன்
எழிலார்ந்த நன்மனத்தார் பிரபஞ் சன்தான்
உழுதார்க்கு எழுத்துவிதை விதைத்த நல்லார்
உள்ளார்ந்த எழுத்தர்க்கெ லாமும் நின்றார்
வழுவாத நெறியோடே முதிவந்தார் நம்மில்
வார்த்தையிலே வித்தகராய் வலம்வந் தாரே
முழுதாக தமிழுலகின் முன்னர் என்பர்
முழுதாக பிரிந்ததேனோ கண்ணீர் மல்க!

நற்கதைகள் பலவாக யாத்த ளித்தார்
நல்லகரு கொண்டகதை பலவும் தந்தார்
சொற்கலவைச் சொறிந்ததமிழ்ச் சித்த ரென்றே
சொல்லொண்ணா விருதுபல சேரப் பெற்றார்
தற்போது நமைவிடுத்து எங்கோ சென்றார்
தவிக்கின்ற எழுத்துலகை தேற்ற யாரே
பொற்பாத யிறையடியை தழுவிக் கொண்டப்
பொன்னாரை பிரிந்தழுதே கண்ணீர் மல்க!

- பாவரசு. கு. நா. கவின்முருகு



எழுத்துலகின் பிரபஞ்சமே காற்றில் கலந்தாலும் காலத்தின் அழியாச் சுவடு நீ....

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜனவரி 2019



முழுமதி
குளிக்கத் துவங்கினாள்
அழகானது குளம்

தமிழ்நெஞ்சம் அமின்

## பாவலர் கருமலைத்தமிழாழன் நேர்காணல்